


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 344 | புதன்கிழமை | ஐப்பசி 24 ஆம் நாள் . 10 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# வடக்கில் கொட்டித் தீர்க்கிறது கனமழை!

- யாழ்., மன்னார் மாவட்டங்களில் 11,085 குடும்பங்களைச் சேர்ந்த 37,858 பேர் பாதிப்பு
- 164 குடும்பங்களைச் சேர்ந்த 568 பேர் தற்காலிக தங்குமிடங்களில்

யாழ்ப்பாணம், நவம்பர் 10

வடக்கில் கொட்டித்தீர்க்கும் கனமழை காரணமாக யாழ்ப்பாணம், மற்றும் மன்னார் ஆகிய இரு மாவட்டங்களிலும் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இரு மாவட்டங்களிலும் 11 ஆயிரத்து 085 குடும்பங்களைச் சேர்ந்த 37 ஆயிரத்து 858 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 15 >



## 36 மணித்தியாலங்களுக்கு வடக்கில் மழை

யாழ்ப்பாணம், நவ. 10

வங்களா விரிகுடாவில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம், 15 >

## முல்லையில் வான்பாய்கின்றன 26 குளங்கள்

முல்லைத்தீவு, நவ. 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் மழை தொடர்கின்ற போதும், இதுவரை 15 >

## சீரற்ற காலநிலை: 17 பேர் சாவு!

கொழும்புஇ நவ. 10

யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் 17 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் நேற்று 15 >

## யாழ். குடாநாட்டில் நீர்த்தடுப்பணைகளில் நேற்று 50 கதவுகள் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தை கடலுக்குப் பாயவிடும் நோக்கில், மாவட்டத்தில் மூன்று இடங்களிலுள்ள தடுப்பணைகளின் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. தொண்டைமானாறு உவர்நீர் தடுப்பணையில் பெரிய கதவுகள் ஆறும், 15 >

## கனகாம்பிகை, வன்னேரி குளங்கள் வான்பாய்கின்றன

கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாக கனத்த மழை பெய்துவருகின்றது. இதனால், கனகாம்பி 14 >

## பாடசாலைகளை மூடுவது பற்றி மாவட்டச் செயலர்கள் முடிவெடுக்கலாம்

*அமைச்சின் செயலர் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ. 10

வடக்கு மாகாணத்தில் தொடரும் கனமழை காரணமாக வெள்ளப்பாதிப்பு ஏற்பட்ட பிரதேச 15 >

## திடீரென விடுமுறை அறிவிப்பு; மாணவர்கள், ஆசிரியர்கள் அவதி

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று பாடசாலைகள் மூடப்படும் என்ற அறிவித்தல் 14 >

## யாழ்., கிளி. மன்னார் பாடசாலைகள் இன்று மூடப்படும்

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இன்று பாடசாலைகள் மூடப்படும் 14 >

## கொரோனா வவுனியாவில் 42 மன்னாரில் 26

வவுனியா, நவ. 10

வடக்கில் கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்ந்து அடையாளம் காணப்பட்டுவரும் நிலையில், வவுனியாவில் மேலும் 42 பேருக்கு கொரோ 14 >

## யாழிலிருந்து சென்ற ரயிலில் பற்றியது தீ!

வவுனியா, நவ. 10

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட ரயில் வவுனியாவை அண்மித்தபோது திடீரென தீ ஏற்பட்டது. எனினும், ரயில் ஊழியர்கள் விரைந்து செயற்பட்டு, தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுப்பிற்பகல் புறப் 14 >

## எரிபொருள் விலை உயர்வு டிசெம்பர் 10இல் முடிவு!

கொழும்பு, நவ. 10

உலகில் கடந்த 5 மாதங்களில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படாத ஒரே நாடு இலங்கை மட்டுமே. எனினும், எதிர்காலத்தில் எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதா அல்லது இல்லையா என்பது நிதி அமைச்சின் கைகளிலேயே 14 >

## கிளிநொச்சி விபத்தில் இருவர் பரிதாபச் சாவு!

*ஒருவருக்கு நேற்று பிறந்தநாள்*

கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சி, பரந்தனில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் 14 >



# இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு தயங்குகின்றமை ஏன்?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

**கொழும்பு, நவ. 10**

**வடக்கு- கிழக்கு கடல் பிரதேசங்களில் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பைதடுக்க அரசு நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் வெத ஆராச்சி சபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

வடக்கு கிழக்கில் சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடுவோர் எமது மீனவர்களின் படகுகளை உடைப்பதுடன், மோதல்களில் ஈடுபடுகின்றனர். எமது கடல் வளத்தை அழிக்கும் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். எமது ஆட்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவில் இருந்து எல்லைதாண்டி வரும் படகுகளுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்யவும் உத்தரவிட்டார். எமது ஆட்சியில் 75 வீத ஆக்கிரமிப்பை தடுத்தோம்.

ஆனால், இப்போது மீண்டும் எல்லை தாண்டிய அத்துமீறிய மீன்பிடி செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இது குறித்து அரசு கருத்தில் கொள்ளவும் இல்லை. வெறுமனே கைதுகள் சில இடம்பெற்று வருகின்றன, வேறு எந்த செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. இது வடக்கு மீனவர்களுக்கு மட்டுமே தாக்கத்தை ஏற்படுத்தும் பிரச்சினை அல்ல. இலங்கையில் சகல பகுதிகளிலும் உள்ள மீனவர்களையும் இது பாதிக்கும்.

இழுவைப் படகுகளைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபடும் வேளையில் மீன் வளம் முழுமையாக அழியும், கடல் வளங்களும் அழியும். இதனைத்தடுக்கவே தமிழ் எம்.பிக்கள் கடலில் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர், அரசுக்கு அழுத்தம் கொடுத்தனர். மீன்பிடித் துறை அமைச்சருக்கு இதில் கப்பம் கிடைப்பதா கவும் சுமந்திரன் எம்.பி அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். எனவே இந்த விடயத்தில் அரசும் தலையிட முடியா துள்ளமை ஏன்? மீன்பிடித்துறை அமைச்சருக்கு இதனை ஏன் கட்டுப்படுத்த முடியா துள்ளது? விவசாயிகளுக்கு நடக்கும் அநியாயமே இன்று மீனவர்களுக்கும் இடம் பெற்றுக்கொண்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள 25 இலட்சம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை முழுமையாக அழிக்கும் விதத்தில் இவை அமைந்துள்ளன. உண்பதற்கு மீன் வளம் இல்லாது போகும் - என்றார். (ம)



## கைதடிப் பகுதியில் ஹைஏஸ் விபத்து

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியினூடாக பயணித்த ஹைஏஸ் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து, கைதடி பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையில் குடைசாய்ந்துள்ளது. இந்த வாகனத்தில் எட்டுப் பேர் பயணித்துள்ளனர். இதில் செலுத்துநருக்கு மட்டும் காயம் ஏற்பட்டுள்ள நிலையில், அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-27-159)

## காலை வெள்ளக்காடு மதியமே மாயமானது!

### யாழ்.நகரில் முதல்வர் மணியின் முன்னாயத்த நடவடிக்கை வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாண நகரில் உள்ள வீதிகளில் நேற்றுக் காலை தொடக்கம் பெரு வெள்ளம் தேங்கிய நிலையில், மதியவேளை வெள்ளம் வடிந்து விட்டது. முன்னைய காலங்களில் வெள்ளம் ஏற்பட்டால் நாள் முழுவதும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கும். கடைகளுக்குள்ளும் வெள்ளம் நெடுநேரம் வற்றாமல் காணப்படும். வர்த்தகர்கள் மட்டுமன்றி பொதுமக்களும் பெரும் இடர்களை எதிர்கொள்வர்.

இந்தநிலையில், யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், நகரிலுள்ள பல கால்வாய்களைத் தூர்வாரும் கனதியான நடவடிக்கையை பல வாரங்களாக மேற்கொண்டிருந்தார். முன்னாயத்தம்மிக்க அவருடைய காத்திரமான நடவடிக்கையால், நேற்றுக்காலையில் யாழ். ஸ்ரான்லி வீதி உள்ளிட்ட சில வீதிகளில் வெள்ளம் தேங்கியபோதும், மதியநேரத்துடன் வெள்ளம் வடிந்து வீதி வழமைக்குத் திரும்பிவிட்டது. அதனால் வர்த்தகர்களும், பொதுமக்களும் பயனடைந்தனர். (கு)

*வரலாற்றுப் பிரச்சினை இது*

## இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு இராஜாங்க அமைச்சர் விளக்கம்

கொழும்பு, நவ. 10



வடக்கில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி ஆக்கிரமிப்புக்கள் எமது ஆட்சிக்காலத்தில் மட்டுமல்ல, வரலாறு முழுவதுமே இடம் பெறுகின்றது என்று தெரிவித்தார் அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழிற்றுறை முகங்கள் அபிவிருத்தி மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலிப் வெத எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி ஆக்கிரமிப்புகள் எமது ஆட்சிக்காலத்தில் மட்டுமல்ல, வரலாறு முழுவதுமே இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. முன்னைய ஆட்சிக்காலத்தில் இருந்து பல கட்டங்களில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் உறுதியான தீர்வு ஒன்றும் கிடைக்கவில்லை. எமது ஆட்சியில் எந்த அனுமதியும் வழங்கவில்லை.

குறித்த இந்திய மீனவர்களின் படகுகளில் எல்லை தாண்டாத வகையில் சமிக்ஞைகளை வெளிப்படுத்தும் இயந்திரங்களை பொருத்துமாறு இந்தியாவுக்குத் தூதரகம் மூலமாக அறிவித்துள்ளோம். அதுமட்டுமல்ல எல்லை தாண்டும் மீனவர்களை கைது செய்யும் செயற்பாடுகளை கடற்படையினர் நிறுத்தவும் இல்லை. எனினும் கடந்த காலங்களில் டெல்டா வைரஸ் பரவல் காரணமாக இவ்வாறு கைது செய்யும் இந்திய மீனவர்களை இலங்கைக்குள் அழைத்துவரும் செயற்பாடுகளில் பிரச்சினைகள் காணப்பட்டன. ஆகவே அவர்களை விரட்டியடிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கவே கடற்படைக்கு சுகாதாரத் தரப்பினர் ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்- என்றார். (ம)

## சுகவீன விடுப்புப் போராட்டத்தில் துணை மருத்துவ அலுவலர்கள்!

சாவகச்சேரி, நவ. 10

துணை மருத்துவ அலுவலர்களின் போராட்டத்தால் நேற்று பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததை அவதானிக்க முடிந்தது. சுகாதாரத் திணைக்களத்தில் கடமையாற்றும் துணை மருத்துவ சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் நேற்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டதனால் மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் ஆகியவற்றுக்குசிகிச்சைபெறச் சென்ற மக்கள் சிகிச்சைபெற முடியாமல் வீடு திரும்பியுள்ளனர். தொழிற்சங்க நடவடிக்கையாக இந்த சுகவீன விடுமுறைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)





கந்தசஷ்டி விரதத்தின் ஐந்தாம் நாள் உற்சவம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று இடம்பெற்றது. முருகப்பெருமான் சூரனுக்குப் பாலனாக காட்சியளித்த புராணக் கதையின் வடிவாக பாலஸ்கந்தனாக எழுந்தருளி அருள்பாலித்தார். (ஒ-4)

# கொரோனாத் தொற்று மன்னாரில் அதிகரிப்பு

## 8 நாள்களில் 154 தொற்றாளர்கள்

மன்னார், நவ. 10

மன்னார் மாவட்டத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் வரையிலான 8 தினங்களில் 154 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொற்றாளர்களின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருவதையே இது காட்டுகின்றது என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

மன்னார் மாவட்டத்தில் திங்களன்று மேலும் 26 தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். நவம்பர்மாதம் முதலாம் திகதி முதல் எட்டாம்திகதி வரையான காலப்பகுதியில் 154 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த 7ஆம் திகதி மன்னாரைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவர் கொரோனாவால் உயிரிழந்துள்ளார். மாவட்டத்தில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24ஆக அதிகரித்துள்ளது - என்றார். (ம-56)

# இனப்பரம்பலை மாற்ற எத்தனிக்கும் முயற்சிகளுக்கு எதிராகப் போராட்டம்

வவுனியா, நவ. 10

**வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பலை மாற்ற எடுக்கும் முயற்சிகளுக்கு எதிராக போராட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது. நெடுங்கேணி நகரில் எதிர்வரும் 15ஆம் திகதி காலை 10 மணிமுதல் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது என்றும் அதில் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என்றும் வவுனியா வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.**

குறித்த போராட்டத்தின் ஏற்பாட்டுக் குழுவின் சார்பில் நேற்று அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா மூன்று இனமக்களும் நீண்டகாலமாக வாழுகின்ற மாவட்டம். எமது மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதனூடாக இனப்பரம்பலை மாற்றுகின்ற செயற்பாடு கடந்த காலங்களில் அடுத்தடுத்து வந்த அரசுகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2010ஆம்ஆண்டுவரை வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவு வவுனியா வடக்கு பிரதேச சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசமாக இருந்தது. அதன் பின்னர் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் ஒரு பகுதி அநுராதபுர மாவட்டத்தின் கெப்பிட்டிகொல்லாவ பிரதேச செயலாளர் பிரிவினால் நிர்வகிக்கப்பட்டு, சிங்களக் குடியேற்றம் நடைபெற்றது. வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவின் ஒரு பகுதியான கொக்கச்சான்குளம் 1983ஆம்ஆண்டு காலப்பகுதியில் சிங்களக்குடியேற்றம் செய்யப்பட்டு, வவுனியா தெற்கு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையுடனும் இணைக்கப்பட்டது.

இன்று எமது பாரம்பரிய பிரதேசத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதேவேளை வடமத்திய மாகாணத்தின் அநுராதபுர மாவட்டத்தில் உள்ள மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளை வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதற்கான வேலைத்திட்டமானது, கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதியின் கொக்கச்சான் குள (போகஸ்வெள) விஜயத்தின் பின்னர் எந்தவித கலந்துரையாடலுமின்றி பேரினவாதிகளால் மேற்கொள்ளப்படுகிறது.

போர் காரணமாக கைவிடப்பட்ட நிலையில்இருந்த வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கச்சல் சமளன்குளம் என்கின்ற குளத்தையும் அதற்கு மிக அருகில் இருந்த கைவிடப்பட்ட இன்னோர் குளத்தையும் இணைத்து பெரிய குளமாக மாற்றி நீர்பாசனக் காணிகளை 2 ஏக்கர் வீதம் பிரித்து தென்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்களுக்கு வழங்குவதற்கு கடந்த ஆட்சிக்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எமது எதிர்ப்பினால் அந்தச்செயற்பாடு கைவிடப்பட்டிருந்தாலும், தற்போது விவசாயக்காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு குடியேற்றம் நடைபெற்றுள்ளது. எமது நிலம் எம்மிடமிருந்து பறிக்கப்படுவதை நாம் அனைவரும் இணைந்து தடுப்பதோடு அந்த நிலங்களை பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபட வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே இனப்பரம்பலை மாற்றும் அரசின் செயற்பாட்டை கண்டித்தும் உரம் மற்றும் களைநாசினிகள் இன்மை, ஆசிரியர்களின் சம்பளமுரண்பாடு தீர்க்கப்படாமை அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு போன்றவற்றை கண்டித்தும், எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நெடுங்கேணி நகரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் -என்றுள்ளது. (ம-110)

# உயிருக்கு போராடிய யானை பரிதாபச்சாவு!



வவுனியாவில் நெடுங்கேணி ஊஞ்சால்கட்டி காட்டுப்பகுதியில் கடந்தவாரம் காயங்களுடன் அவதானிக்கப்பட்ட யானை, சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது. மீண்டும் காட்டுக்குள் செல்ல முடியாமல் வீழ்ந்திருந்த அந்த யானைக்கு கடந்த 7ஆம் திகதி வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன், வடக்கு மாகாணத்தின் கால்நடை மருத்துவர் கிரிதரன் குழுவினரால் சிகிச்சையளிக்கப்பட்டிருந்தது. எனினும் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் அந்த யானை உயிரிழந்தது. (ம-110)




**ஆரையும் நொட்டை சொல்லுறதெண்டா எங்கட சனத்துக்கு அல்வா சாப்பிடுறமாதிரி. எல்லாரும் நாங்கள் எல்லாம் திறமெண்டு மற்றவையை மட்டும் குறை சொல்லுறதைத்தான் தொழிலா வைச்சிருக்கிறம். அதிலையும் உந்தப் பேஸ்புக்கில எல்லாரும் ஏதோ ஹைகோர்ட்டில சத்தியப்பிரமாணம் எடுத்த நீதிபதியள் மாதிரி எல்லா விசயத்துக்கும் தங்கட எக்கவுண்டில பஞ்சாயத்தைக்கூட்டி, தாங்கள் ஒரு தீர்ப்பையும் சொல்லுறதில வலுவிண்ணர்தான். அதுக்கு வாற நாலைஞ்சு லைக்ஸை எப்பிடி நூறு நூற்றம்பதா மாத்தலாம் எண்டு அடுத்த நாள் இன்னொரு பிரச்சினையை எடுத்து தீர்ப்புச் சொல்லுவினம். இப்பிடி ட்ரெண்டிங் மாற மாற வழக்கும் மாறும், தீர்ப்பும் மாறும், லைக்ஸும் ஏறும்.**

**இப்பிடித்தான் தங்கட லைக்ஸுக்காக இப்ப எல்லாரும் பேஸ்புக்கில அங்க மழை , இங்க மழை , ரவுனுக்க வெள்ளம், ரவுண் வெள்ளத்துக்க படகுச்சேவை நடத்தலாம் எண்டு நொட்டை மேல சொட்டையாச்சொல்லி, யாழ்ப்பாண முனிசிபல் மேயர் தொடக்கம் வாய்க்கால் கட்டின இஞ்சினியர் வரைக்கும் எல்லோரும் குற்றவாளிகளே எண்டு குற்றச்சாட்டுப் பத்திரமும் வாசிச்சினம். ஆனால், பரிதாபம் என்னெண்டால், அவை அப்பிடி ஒரு அறைக்குள்ள குந்தியிருந்து பேஸ்புக்கில வெட்டியா பதிவுகளைப் போட்டுக் கொண்டிருக்கேக்க, இஞ்சால யாழ்ப்பாண ரவுனுக்க நிண்ட வெள்ளமெல்லாம் வடிஞ்சிட்டுது.**

**அதுக்கு காரணம் முனிசிபல் மேயர் மணிவண்ணன் தான் எண்டதை ஆரைக் கேட்டாலும் சொல்லுவினம். ஆள் மேயரா வந்தவுடன செய்த முதல்வேலையே ரவுனுக்க இருந்தா எல்லா வாய்க்காலையும் தூர்வாரி, சுத்தப்படுத்தி வெள்ளம் ஓடக்கூடியமாதிரி ஒழுங்கு பண்ணினதுதான். அப்பிடி முன்யோசனையோட மணி வேலை செய்ததால, போனமுறை மாதிரி பேஸ்புக் கூட்டம் கலாய்க்கிறதுக்கு முதலே ரவுனுக்க நிண்ட வெள்ளம் காணாமல்போட்டுது. மணியைப் பற்றிச் சொல்லேக்க அவரின்ர வலக்கை பார்த்தீபனைப் பற்றியும் சொல்லாமல் இருக்க ஏலாது. ரண்டுபேரும் தான் கூட்டா இறங்கி, இந்த வேலையைச் செய்துமுடிச்சவை. சொல்லை விட செயலே சிறந்த ஆயுதம் எண்டுவினம். அதை மாதிரி வெள்ளம் இன்னும் கெதியாய் வழிஞ்சோடுறதுக்கு வசதியா, வாய்க்காலுகளை அடைச்சுக் கொண்டிருந்த கஞ்சல், குப்பையளை முனிசிபல் வேலையாக்களோட சேர்ந்து, கொட்டுற மழைக்குள்ளயும் முனிசிபல் மெம்பர் பார்த்தீபனும் சேர்ந்து அள்ளி அலுவலை முடிச்சிருக்கிறார். அவர் ஒரு முனிசிபல் மெம்பர். மற்ற மெம்பர்ஸ் மாதிரி வெள்ளைவேட்டி, வெள்ளைச் சேர்ட், குடை பிடிக்க ஒராள் எண்டு பந்தாவா நிண்டு படத்துக்கு போஸ் குடுத்திட்டு போயிருக்கமுடியும். ஆனால், பார்த்தீபன் அப்பிடிச் செய்யாமல் முன்மாதிரியாக தானும் ஒரு வேலையாளாய் மாறி, சுத்தம் செய்ததுதான் ஹைலைட்.**

**இவை மாதிரி இன்னும் சில இடங்களில எங்கட பிரதேச சபை உறுப்பினர்கள், தவிசாளர்கள் சனத்துக்க இறங்கி வெள்ளத்தைக் கட்டுப்படுத்திறதிலையும், பாதிக்கப்பட்ட ஆக்களுக்கு நிவாரணம் குடுக்கிறதிலையும் இந்த அடைமழையையும் பாராமல் பாடுபடுகினம் எண்டும் தகவல்கள் பட்சிக்கு கிடைச்சிருக்கு. அப்பிடி மக்களுக்காக இறங்கி வேலை செய்யிற அத்தனை இளம் அரசியல்வாதிகளுக்கும், பட்சியின்ர பெரிய 'சல்யூட்!'**

**பேஸ்புக் குஞ்சுகள் மீம்ஸ் போட்டு ஓரமாப் போய் விளையாடுங்கோ, எங்கட இளம் அரசியல்வாதியளுக்கு நிறைய வேலையிருக்கு...!**



- பட்சி





# வெள்ளத்தில் பல கிராமங்கள்

தொடர்மழையால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அச்சுவேலி, தொண்டமானாறு, நீர்வேலி, காக்கைதீவு, பொம்மைவெளி உள்ளிட்ட தாழ்வுப் பகுதிகள், கடற்கரையோரங்கள் ஆகியன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (ம-4-17)

















# மன்னாரில் அதிக மழை

மன்னார் மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருகின்ற நிலையில், அங்கு அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. தலைமன்னார், பேசாலை, தாழ்வுப்பாடு, மன்னார் சாந்திபுரம்,சௌத்பார், ஜிம் ரோன் நகர், மடுக்கரை, விடத்தல்தீவு, தேவன்பிட்டி உள்ளிட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (ம-4-56)

# நந்திக் கடல் உடைப்பெடுப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்த மழை காரணமாக, நந்திக் கடல் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் உடைப்பெடுத்துள்ளது. (ம-4-13)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொறிமுறைகளே தேவை பாணும் பருப்பும் அல்ல!

வங்கக் கடலில் நிலைகொண்டிருந்த தாழமுக்கம் காரணமாக வடக்கு மாகாணத்தில் நேற்றுமுன்தினம் இரவும் நேற்றும் கனமழை கொட்டித் தீர்த்துள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பலத்த மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. வெள்ளம் வழிந்தோட இடமின்றி பல வீடுகளும், கட்டடங்களும் வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. ஏன் இந்த அவல நிலை? இதுகாலும் ஒரு மழைக்காலத்தையாவது நாம் சரிவரக் கையாண்டிருக்கின்றோமா? எப்போதுதான் இந்தப் பேரவல நிலைக்கு ஒரு முடிவு வரும்? இவ்வாறான கேள்விகளுக்கான விடைகளைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டியவர்களாக நாம் இன்று இருக்கின்றோம்.

இந்த மழைக்காலத்தில் வடக்கு மாகாணம் பெரும் வெள்ள இடருக்கு முகம் கொடுக்கும் என்பது புதிரான விடயம் கிடையாது. இதை மாற்றுக் கருத்தின்றி – விவாதத்துக்கு இடமின்றி அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். காரணம், வடக்கு மாகாணத்துக்கு வெள்ள இடர் எச்சரிக்கை விடுக்கப்பட்டு, இற்றைக்கு 20 நாள்கள் ஆகின்றன. வங்கக் கடலில் ஐந்துக்கும் மேற்பட்ட தாழமுக்கங்கள் ஏற்பட வாய்ப்புள்ளன என்றும்– ஆறு சுற்றுக்களாக வடமாகாணத்துக்கு மழை கிடைக்கும் என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல்துறையின் மூத்த விரிவுரையாளரின் தகவலை ஆதாரமாகக் கொண்டு ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி 'உதயன்' வெளிப்படுத்தியிருந்தான் – எச்சரித்திருந்தான்.

ஆனால், இந்த எச்சரிக்கையை துறைசார்ந்த அதிகாரிகள் எவ்வளவு பாரதூரமாக எடுத்துக்கொண்டார்கள்? வெள்ள இடரைத் தவிர்ப்பதற்காக என்ன நடவடிக்கையை முன்னெடுத்தனர்? என்று மக்கள் மன்றில் அவர்கள் பதில்சொல்லியே தீரவேண்டும். தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தொடர்பில் கூடுதல் கரிசனை கொள்ளவேண்டிய விடயம் இது. வெள்ளம் என்பது வடக்குக்குப் புதிதல்ல. ஆனால், வெள்ளத்தின் கனதியை உணர்ந்து தாழ்நிலப் பகுதி மக்களை உரியவாறு வெளியேற்றி, இடைத்தங்கல் முகாம்களில் அமர்த்தி – நிவாரணங்களை சீரான முறையில் வழங்கிய பதிவுகள் எவையும் இதற்கு முன்னர் இல்லை. இதே மெத்தனப்போக்கு இந்த வருடமும் இருந்துவிடக் கூடாது என்றிருந்த எதிர்பார்ப்பு தற்போது முழுவதும் பொய்த்துப் போய்விட்டது.

வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்கள் என்று கருதப்படும் இடங்களை அடையாளப்படுத்தி அந்தப் பகுதி மக்களை இந்த இடரில் இருந்து காப்பாற்றக்கூடிய அத்தனை வழிகளையும் உரிய அதிகாரிகள் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். ஆரம்பிக்கப்பட்ட கால்வாய் கட்டுமானங்கள் நிறைவு பெற்றுள்ளனவா என்பதை துறைசார் அதிகாரிகள் உறுதிப்படுத்தியிருக்கவேண்டும். பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதைபோன்று கால்வாய்களை புதிதாக அமைக்கப்போய் அந்தக் கட்டுமானங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டு, இருந்ததையும் இழந்த கதையாகத்தான் விடயம் ஆகிவிட்டது.

வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்த பின்னர், வெளிக்காட்டப்படும் அக்கறையால் எந்தப் பயனும் இல்லை. அவை வெறும் பகட்டு நடவடிக்கைகள் என்பதையும் – தேர்தலையும் – வாக்குகளையும் இலக்குவைத்து அரங்கேற்றப்படும் நாடகங்கள் என்பதையும் மக்கள் மிக நன்றாகவே அறிவார்கள். அதிகாரிகளாகிய – அரசியல்வாதிகளாகிய நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் வெள்ள முகாமைத்துவம் ஒன்றை கச்சிதமாக ஏற்படுத்துவதேயன்றி பாணும் பருப்பும் வழங்கும் நிவாரணத் திட்டங்களையல்ல. நேரகாலத்துடன் எச்சரிக்கை விடப்பட்டும் இவ்வளவு பெரிய வெள்ளப் பேரிடர் ஏற்படுவதை அனுமதித்ததென்பது மன்னிக்க முடியாத குற்றம்தான்.




# குப்பைக் கப்பலை சீனாவுக்கே கொண்டு செல்லுங்கள்!

## சீறுகிறார் பொன்சேகா

**கொழும்பு, நவ. 10**

**சீனா எவ்வளவு பெரிய நாடாக இருந்தாலும், அந்த நாட்டின் கட்டளைக்கேற்ப செயற்பட நாம் தயாரில்லை. இதனை இங்குள்ள சீனத் தூதுவரும் புரிந்துகொள்ளவேண்டும். குப்பைக் கப்பலை உங்கள் நாட்டுக்கே கொண்டு செல்லுங்கள் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டு விவசாயிகள் இன்று வீதிகளில் இறங்கிப் போராடிக்கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் சீனாவின் குப்பைக் கப்பலொன்று எமது நாட்டு எல்லையில் சுற்றித் திரிகின்றது. சீன மக்களின் குப்பைகளைக் கொட்டும் இடம் இலங்கை அல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். இலங்கையானது இறைமைமிக்க நாடு. ஆட்புல ஒருமைப்பாடு உட்பட அனைத்து விடயங்களையும் பாதுகாக்கும் வகையிலேயே வெளிநாடுகளுடன் கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடவேண்டும். தற்போதைய சூழ்நிலையில் சீனாவானது மிகவும் மோசமாக நடந்துகொள்வதை காணமுடிகின்றது. இலங்கையின் கௌரவத்தைப் பாதிக்காத வகையிலேயே கொடுக்கல் - வாங்கல்களில் ஈடுபட வேண்டும் என்பதை சீனா புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையில் உள்ளவர்கள் அரியவகையான மிருகங்கள் என்றே சீனத் தூதுவர் நினைத்துக் கொண்டுள்ளார். எமது நாட்டுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய விடயத்துக்கு நாம் இடமளிக்க மாட்டோம். குப்பைக் கப்பலை அவர்கள் அவர்களின் நாட்டுக்கே கொண்டு செல்ல வேண்டும்-என்றார். (ஒ-44)

# கதிர்காமக்கந்தன் ஆலய இரத்தினக்கற்களும் மாயம்

கொழும்பு, நவ.10

கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் இருந்த 50 மில்லியன் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்கள் காணாமற் போயுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆலயத்தில் இருந்த தங்கத் தகடு ஒன்று காணாமற் போயுள்ளது என்று அண்மையில் தகவல்கள் வெளிவந்திருந்த நிலையில், தற்போது இரத்தினக் கற்கள் காணாமற் போயுள்ளன என்று கூறப்படுகின்றது.

இந்த இரத்தினக் கற்கள் இரத்தினபுரி பிரதேசத்தில் உள்ள இரத்தின வியாபாரி ஒருவரால் ஆலயத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டவை என்று தெரிவிக்கப்படுகின்றது. இரத்தினக் கற்கள் காணாமற் போயுள்ள சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, ஆலயத்தில் இருந்த 38 பவுண் தங்கத் தகடு ஒன்று காணாமற் போயுள்ளது என்று கடந்த மாதம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், ஆலயத்தில் பணியாற்றும் நால்வரிடம் வாக்குமூலம் பெற்றிருந்தனர்.

கடந்த 26ஆம் திகதி என்.எம்.அஜித் புஸ்பகுமார என்ற நபர் ஆலயத்தில் காணாமற் போன தங்கத் தகடு போன்ற தங்கத் தகடு ஒன்றை கதிர்காமம் தேவாலய நிர்வாகச் செயலரிடம் கையளித்துள்ளார். இந்தத் தங்கத் தகடு, ஆலயத்தின் பிரதம பூசகரான சோமபால ரி ரத்நாயக்கவின் இல்லத்தில் இருந்தது என்று அந்த நபர் கூறியுள்ளார்.

இது தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அந்தத் தகடு ஆலயத்தில் இருந்து காணாமற் போன தங்கத் தகடா என்பது தொடர்பாக அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் மற்றும் இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகார சபை ஊடாக ஆராயப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

நவம்பர் 2021 **வடமாகாண மரநடுகை மாதம்**



**"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்"**

**– மூப்பர் அம்பிலோகியோஸ்.**





# மண்சரிவில் சிக்கி தாய், பிள்ளைகள் சாவு!

கொழும்பு,நவ.10

மண்சரிவில் சிக்குண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தத் துயரச் சம்பவம் கேகாலை ரம்புக்கன்ன பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் தாய் மற்றும் 8, 14 வயதான அவரது இரண்டு பிள்ளைகள் உயிரிழந்துள்ளனர். தந்தை காயமடைந்த நிலையில், கேகாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம-4)

## வெள்ளத்தில் பூநகரி



கிளிநொச்சி -பூநகரி பிரதேசத்தில் வெள்ளத்தால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நாச்சிக்குடா, கரடிக்குன்று கரியாலைநாகபடுவான், குமுழமுனை மற்றும் வேரவில் ஆகிய கிராமங்களில் மழை வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்துள்ளது. (ம-4-13)

## வீடுகளுக்குள் வெள்ளம்





சின்னமடுக் கிராமத்தில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால், அங்கிருந்த குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. (4)





## பாலத்தின் வழி பயணம்

கிளிநொச்சி, ஊற்றுப்புலம்- நாவலர்பண்ணை கிராமத்துக்கான பாலத்தின் ஊடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருந்த நிலையில், கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் சம்பவ இடத்துக்குச் சென்று, பாலத்தின் வழியான போக்குவரத்தை இரவோடு இரவாக சீர் செய்ய நடவடிக்கை எடுத்தார். (ம-4-214)

## மண்சரிவு





நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் நுவரெலியா பிளக்பூல் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் வாகனப் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது. (4)




நாடு பூராவும் தன் கிளைகளை விஸ்தரித்து அனைத்து நிதித் தேவைகளுக்கும் ஒரே கூரையின் கீழ் மிகச் சிறந்த சேவைகளை வழங்கி வரும் கொமர்ஷல் லீசிங் & பினான்ஸின் சுன்னாகம் கிளைக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

சுன்னாகம் கிளை கே.கே.எஸ் வீதி (பொன் ராமநாதன் சாலை) சுன்னாகம்

தொடர்புகளுக்கு : 0777689561

CLC கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ்






# பஸ் தரிப்பிடத்தில் தாழ்வாரமில்லை

சாவகச்சேரி,நவ.10

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்திருக்கும் பஸ் தரிப்பு நிலையத்துக்கு தாழ்வாரம் அமைக்கப்படாத காரணத்தால், பயணிகள் மழை காலத்தில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பஸ் தரிப்பு நிலையத்துக்குள் தூவானம் உட்செல்வதால் இருக்கைகளை பயணிகள் பயன்படுத்த முடியவில்லை.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்ட சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையம் உயரமாகக் கட்டப்பட்டதால், மழை தூவானம் உட்செல்கின்றது.

தூவானம் உட்செல்லாதவாறு அதன் இருபக்கமும் சரிவான தாழ்வாரம் அமைக்க வேண்டும்.

அத்துடன் பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாக வெள்ளம் தேங்கி நிற்பதால், பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்- என்று தெரிவிக்கப்பட்டது. (ம-4-9-159)

# குடிதண்ணீர் விநியோகம் தடை

கிளிநொச்சி,நவ.10

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை தொடர்வதால், சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை விநியோகிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளர் எந்திரி எஸ். சாரங்கன் தெரிவித்துள்ளனர்.

எதிர்பார்க்கப்படாத மழை காரணமாக கிளிநொச்சிக்குளத்துக்கு, அதன் நீரேந்துப் பகுதிகளிலிருந்து அதிகளவான கலங்கிய நீர் வருகை ஏற்பட்டுள்ளது. இதனால் குடிதண்ணீருக்கான நீரை சுத்திகரித்து வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் மட்டுப்படுத்தப்பட்ட குடிதண்ணீர் விநியோகமே மேற்கொள்ளப்படும்.

நாளாந்த தண்ணீர்த் தேவையின் மூன்றில் ஒரு பகுதியை மாத்திரமே தற்போது வழங்கக்கூடியதாக உள்ளது. இதன் காரணமாக பொதுமக்கள் தண்ணீரைச் சேமித்துச் சிக்கனமாகப் பயன்படுத்துவதுடன், கொதித்தாறிய தண்ணீரையும் பயன்படுத்தமுடியும். மேலதிக தகவல்களுக்கு- 021 2283981 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

(ம-4-214)



# இடருக்குள் பரீட்சை எழுதிய மாணவர்கள்

யாழ்ப்பாணம்.நவ.10

யாழ்ப்பாணத்தில் கனத்த மழை பெய்து வருகின்ற நிலையில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

எனினும் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட இரண்டாம் வருட, இரண்டாம் அரையாண்டு மாணவர்கள் நேற்று பரீட்சைகளுக்கு தோற்றியுள்ளனர். மாணவர்கள், நாட்டு நிலைமையால் தமது பரீட்சையை எழுத முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் தமது கல்வியாண்டு நீடிப்பதை விரும்பாத மாணவர்கள், இணையவழி மூலமாக இடம்பெறவிருந்த பரீட்சையை மாற்றியமைத்து, நேர்முகரீதியாக பரீட்சை எழுதுவதற்காக வெளிமாவட்டங்களில் இருந்தும், யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களிலிருந்தும் வருகைதந்து, பரீட்சைக்குத் தோற்றினர்.

(ம-4-125)

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 09 . 1957



மறைவு
08 . 11 . 2021

## கனகசுந்தரம் இந்திரராசா

### (இந்திரன் ஐயா)

மல்லாகம் சோடாக் கொம்பனி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் இந்திரராசா நேற்று முன்தினம் (08.11.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் பாக்கியப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை அழகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் ஜெயரஞ்சினியின் பாசமிகு கணவரும், லக்ஷனா, நிஷாந் (கட்டார்), ஜெயந்தா, ஜெகேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயபரனின் அன்பு மாமனாரும், செந்திமதி, காலஞ்சென்ற சந்திரராசா, காந்திமதி ஆகியோரின் சகோதரரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.11.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மல்லாகம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மகன் : 077 548 7731
077 606 3378 (CS 41016) (3/6)

தகவல்:
குடும்பத்தினர்

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், சமாளித்து விடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம் :** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு நல்லபடி முடியும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்கள் மூலம் கிடைக் கும் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** உற்சாகமானநாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்பு தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும், முடிந்து விடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். தாய்வழி உறவினர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது நல்லது.

**மகரம்:** செயல்களில் திட்டமிடுதல் மிகவும் அவசியம். அதேபோல் கடன்கள் விடயத்திலும் சற்று கவனம் செலுத்துவது நல்லது. சிலருக்கு தந்தைவழி உறவினர்கள் மூலம் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன் மனைவிக்கிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும்.



## வான்பாய்கிறது



கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாக கனத்த மழை பெய்து வருகின்ற நிலையில், கனகாம்பிகைக்குளம், வன்னேரிக்குளம் ஆகியவை வான் பாய்ந்து கொண்டிருக்கின்றன. (ம-4-6)



## நீர்மட்டம் உயர்வு

மலையகத்தில் இருக்கும் நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. அந்தவகையில் விக்ரோரியா நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால், இரண்டு வான்கதவுகள் நேற்று முன்தினம் இரவு முதல் திறக்கப்பட்டுள்ளன. (ம-4)

## வீதி முடக்கம்



யாழ்ப்பாணத்தில் கனத்த மழை பெய்து வருகின்ற நிலையில், யாழ். பல்கலைக்கழக வளாகம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், பரமேஸ்வரா சந்தி வீதி முடக்கப்பட்டுள்ளது. (ம-4)

## வான்கதவுகள் திறப்பு



மலையகத்தில் பெய்து வரும் கடும்மழை காரணமாக கொத்மலை காமினி திஸாநாயக்க நீர்த்தேக்கத்தின் 3 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. (ம-4)

## நெல்வயல்கள் அழிவு

சாவகச்சேரி,நவ.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெய்துவரும் அடைமழையால் விவசாயப்பயிர்கள் அழிவடையும் நிலைமையில் உள்ளன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

நெல் வயல்களில் பயிர்களை மூடி வெள்ளம் காணப்படுகின்றது. மேட்டு நிலங்களில் பயிரிடப்பட்ட உப உணவுப்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நெல்வயல்களில் தாழ்வான பகுதிகள் மற்றும் குளங்களை அண்டியுள்ள பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளம் வாய்க்கால்கள் நிறைந்து பாய்ந்து கொண்டிருப்பதால், பயிர்கள் அழிவடையும் நிலைமையில் உள்ளன என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ம-4-9)

# அரைகுறை அபிவிருத்தியால் என்ன பயன் கிட்டும்?



■ என்.பிருந்தாபன்

யாழ். மாவட்டத்தில் தற்போது பல வீதிகள் காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒன்றாக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்த யாழ்ப்பாணம்- மானிப்பாய்- பொன்னாலை வீதியும் புனரமைக்கப்படுகின்றது. நீண்டகாலம் தாம் எதிர்கொண்ட சிரமங்களிலிருந்து விடுபடுவதையிட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். எனினும், வீதியின் புனரமைப்பு விதம் மக்களை கவலையடையச் செய்துள்ளது.

யாழ்ப்பாணம், சுடுகாட்டுஆலடிச்சந்தியில் இருந்து மானிப்பாய் ஊடாக பொன்னாலைச் சந்திவரை இந்தவீதி புனரமைக்கப்பட உள்ளது. அதாவது இந்த வீதி யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளை ஊடறுத்துச் செல்கின்றது. அதேபோன்று, யாழ்.மாநகர சபை, நல்லூர் பிரதேசசபை, வலி.தென்மேற்கு, வலி. மேற்கு ஆகிய பிரதேச சபைகளும் இதில் அடங்குகின்றன.

வீதிப்புனரமைப்பு வேலைகள் ஆங்காங்கே ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. மானிப்பாய் சந்தியில் இருந்து, சங்கானை வரை வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. சில இடங்களில் ஆரம்ப வேலைகள் முடிவடைந்து காப்பெற் இடும் பணி மட்டுமே எஞ்சியிருக்கின்றது.

ஆனால், மிகக் கவலையான விடயம் என்னவெனில் இந்த வீதிப் புனரமைப்பின்போது, வீதி அகலிக்கப்படவில்லை என்பதுடன் வீதியில் உள்ள மதகுகள் புனரமைக்கப்படாமல் அவற்றுக்கு மேலாக காப்பெற் வீதி அமைக்கப்படுவதுதான். ஏற்கனவே சேதமடைந்து, அடுத்த சில வருடங்களிலேயே இடிந்து விழக்கூடிய அபாயம் உள்ள மதகுகளைக்கூட புனரமைக்காமல் அவற்றுக்கு மேலாக காப்பெற் இடும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. அருகில் இடம் இருக்கும் பகுதிகளில் மட்டும் வீதி அகலமாகவும் ஏனைய கடைத்தொகுதிகள், இதர கட்டடங்கள் உள்ள இடங்களில் ஒடுக்கமாகவும் வீதி புனரமைக்கப்படு கின்றது. வீதியோரம் இடையூறாக நிற்கும் மரங்கள்கூட தறிக்கப்படவில்லை. ஏனைய இடங்களில் குறிப்பாக, பலாலிவீதி, காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை வீதி போன்றவை புனரமைக்கப்பட்டபோது மக்கள் கட்டடங்களை பின்னகர்த்தி வீதிப் புனரமைப்புக்கு இடமளிக்கவில்லை. இதனால் புனரமைப்புக்குத் தடை ஏற்பட்டது.

எனினும், தொடர்ச்சியாக மக்களுக்கும், வர்த்தகர்கள் மற்றும் இதர தரப்பினருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதன் மூலம் அவர்கள் தமது கட்டடங்களை பின்னகர்த்தி இடமளித்தனர். இன்று குறித்த வீதிகள் போக்குவரத்துக்கு மிகச் சிறந்தவையாக மாற்றப்பட்டுள்ளன. ஆனால், இந்த வேலைத்திட்டம் யாழ்.மானிப்பாய் - பொன்னாலை வீதிப் புனரமைப்பின் ஆரம்பத்தில இடம்பெற்றிருக்கவில்லை. ஆனால், வீதியின் ஆரம்ப புனரமைப்பு இடம்பெற்று காப்பெற் இடுகின்ற வேலை நடைபெற்று வரும் நிலையில் தற்போது - வலி. தென்மேற்கு பிரதேச செயலகம் ஆங்காங்கே சில கூட்டங்களை நடத்தி, மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கையில், ஈடுபட்டுள்ளது. வலி.மேற்கு பிரதேச செயலகமும் இதற்கான சில கூட்டங்களை நடத்தியிருக்கின்றது.

மானிப்பாய் மற்றும் சங்கானை போன்றன எதிர்காலத்தில் நகர சபைகளாக தரம் உயர்த்தக்கூடிய நிலையை எட்டியுள்ளன. இந்த நகரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. சாதாரண நாள்களிலேயே இங்கு சன நெரிசல் அதிகமாக உள்ளது. பண்டிகைக் காலங்களில் போக்குவரத்துச்செய்ய முடியாமல் வாகன நெரிசல் அதிகமாக உள்ளது. இந்த விடயங்கள் தொடர்பாக வர்த்தகர்களும் மக்களும் விழிப்பூட்டப்பட வேண்டும். குறிப்பாக, மானிப்பாய், சங்கானை வர்த்தகர் சங்கங்கள் இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுக்கவேண்டும்.

### வெள்ள வடிதிறன் தொடர்பில் கரிசனை கொள்ளப்பட்டதா?

இது ஒருபுறம் இருக்க, மதகுகள் புனரமைக்கப்படாமை தொடர்பாக உடனடியாக கரிசனை செலுத்தப்படவேண்டும். மானிப்பாய் - பொன்னாலை வீதியில், மானிப்பாய் சந்திக்கு சமீபமாக உள்ள மதகு, கட்டுடைச் சந்தியில் உள்ள மதகு மற்றும் சண்டிலிப்பாய் சந்திக்கு சமீபமாக ஐந்து கண் மதகுக்கு அருகே உள்ள இரு மதகுகள், மேலும் சண்டிலிப்பாய், சங்கானை வீதியில் ஐயனார் சிலையடிக்கு சமீபமாக இரு மதகுகள் என்பன எந்தவித புனரமைப்பும் செய்யப்படவில்லை. ஆறு மதகுகளும் பெருமளவில் சேதமடைந்த நிலையிலேயே உள்ளன. அடுத்துவரும் சில ஆண்டுகளில் மதகுகள் இடிந்து விழக்கூடிய அபாயம் உள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பெரு வீதிகள் புனரமைப்பின்போது மதகுகளின் புனரமைப்புக்கும் சேர்த்தே நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது வழமையானது. யாழ்ப்பாணத்தில் காப்பெற் வீதியாக புனரமைக்கப்பட்ட அத்தனை வீதிகளிலும் ஒரு மதகுகூட புனரமைக்கப்படாமல் விடப்படவில்லை. ஆனால், மேற்படி வீதியில் உள்ள மதகுகளை புனரமைக்காமல் அதற்கு மேலாக காப்பெற் இடப்படும் செயற்பாடு இடம்பெறுவது மோசடியானது. இதுவரை இவ்வாறு ஆறு மதகுகள் புனரமைக்கப்படவில்லை. இதன்மூலம் மக்கள் வெளிப்படையாக ஏமாற்றப்பட்டு, எங்கோ உயர் மட்டத்தில் பெரும் நிதி மோசடி இடம்பெறுகின்றதா என சந்தேகம் எழுந்துள்ளது.




### கவனத்துக்கு கொண்டுவந்தும் கண்டுகொள்ளப்படாத நிலை

இந்த விடயம் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் வலி.தென்மேற்கு பிரதேசசபையில் பேசுபொருளாக இருந்தது. கவனவீர்ப்பு போராட்டமும் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை அவதானித்தனர். இதன்போது சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்ட வீதிப் புனரமைப்புடன் சம்பந்தப்பட்ட பொறியியலாளர்கள் நிலைமையை சமாளித்துவிட்டுச் சென்றனர்.

கிராமிய வீதிகளை புனரமைக்கும் திட்டத்தின் கீழேயே இந்த வீதி புனரமைக்கப்படுகின்றது எனவும், ஆறு மாதங்களுக்குள் இந்தத் திட்டத்தை முடிவுறுத்த வேண்டும் என்பதால் இப்போது மதகுகளை அமைக்காமல் வேலைகள் முடிவடைந்த பின்னர் அமைத்துத் தருவோம் என அவர்கள் கூறினர். முதற்கட்டமாக அதற்குரிய சில பணிகளை இப்போதே தாம் முன்னெடுப்பார்கள் எனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

உயர் அதிகாரிகளின் இந்த உறுதிமொழிகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிப்பதும் காலதாமதம் ஆகுமெனில் காலத்தை நீடிப்பதற்கும் பல வழிகள் உள்ளன. ஆனால், காலத்தைக் காரணம் காட்டி அரைகுறை அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு இடமளிக்க முடியாது. யாழ். மாவட்டத்தில் உள்ள அரச தரப்பு அமைச்சர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ஆகியோரும் இந்த விடயத்தில் அக்கறை இன்றி இருப்பதாகவே தெரிகின்றது.

தினமும் அதிகமான மக்கள் பயணிக்கும் பெரும் வீதி ஒன்றை அரைகுறையாக புனரமைப்பதற்கு அனுமதிக்க முடியாது. இந்த விடயத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூர் அரசியல்வாதிகளான பிரதேசசபை உறுப்பினர்கள் தற்றுணிவுடன் செயற்பட வேண்டும். குறிப்பாக, வலி.தென்மேற்கு, வலி.மேற்கு ஆகிய பிரதேச சபைகள் தமக்குள்ள பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

அபிவிருத்தி என்பது மக்களுக்கானதே அன்றி, அதிகாரிகளுக்கோ அரசியல்வாதிகளுக்கோ உரியதல்ல. எனவே, பாலங்கள், மதகுகள் அனைத்தையும் முழுமையாகக் கட்டி முடித்த பின்னர், வீதியை அமைக்குமாறு உயர் மட்டத்தினருக்கு மக்கள் இடித்துரைக்க வேண்டும். ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் சென்றுவரும் வீதியில், வெளிப்படையாக பெரும் மோசடி இடம்பெறுவதை தடுத்து நிறுத்தவில்லையாயின் அனைவரும் குற்றவாளிகளே....

# முடக்கத்தைத் தவிர மாற்று வழி இல்லை

## சுகாதாரத் தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தீவிரமடையாமல் தடுப்பதாயின் சுகாதார விதிமுறைகளை முறையாக பின்பற்றுவதே அத்தியாவசியமானதாகும். அவ்வாறில்லையெனில், நாட்டை முடக்குமாறு பரிந்துரைப்பதைத் தவிர சுகாதாரத் தரப்பினருக்கு வேறு மாற்று வழி கிடையாது."

இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதாரத் தரப்பினரால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"தற்போதுள்ள நிலைமையை மிகவும் அபாயம் மிக்கதாகவே கருத வேண்டும். தற்போதுள்ள நிலைவரத்தின் உண்மை நிலையை அடுத்து வரும் வாரங்களிலேயே தெளிவாகக் காண முடியும்.

இதன்போது ஏற்படும் அபாயத்திலிருந்து மீண்டு, மீண்டும் சுமுகமான நிலைமைக்குச் செல்ல முடியாத சூழல் ஏற்படக்கூடும்.

எனவே, கொரோனாத் தொற்று பரவுவதைத் தடுப்பதற்குக் காணப்படும் ஒரேயொருவழி சுகாதார விதிமுறைகளை முறையாகப் பேணுவது மாத்திரமேயாகும்.

கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கையில் படிப்படியான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டதோடு, நாளாந்தம் இனங்காணப்பட்ட தொற்றாளர் எண்ணிக்கை சுமார் 500 ஆகவே காணப்பட்டது.

தற்போது நாளாந்தம் சுமார் 600 தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். இது தொடர்பில் சகல தரப்பினரும் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

இல்லையெனில், தொற்றாளர் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்தால் பழைய நிலைமையை அடைவது மிகக் கடினமாகும். அவ்வாறானதொரு அபாய நிலைமை மீண்டும் ஏற்பட்டால் நாட்டை முடக்குமாறு பரிந்துரைப்பதைத் தவிர எமக்கு வேறு மாற்று வழி கிடையாது"- என்றார். (கு-22)




## கூட்டமைப்பினரை நாளை சந்திக்கிறார் இந்தியத் தூதுவர்

### சம்பந்தனின் கோரிக்கைக்கமைய நேற்றைய சந்திப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 10
இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினருக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த சந்திப்பு, சம்பந்தனின் கோரிக்கைக்கு அமைய ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பை நாளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அலுவல்கள் காரணமாகவும், வேறு சில காரணங்களைக் கருத்தில்கொண்டும் நேற்றைய சந்திப்பை ஒத்திவைக்குமாறு இந்தியத் தூதுவருக்குச் சம்பந்தன் அறிவித்துள்ளார். சம்பந்தனின் கோரிக்கைக்கமைய சந்திப்பை நாளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (கு-22)

## சூரசங்காரம்

வட்டுக்கோட்டை, நவ.10
வட்டுக்கோட்டை அடைக்கலம்தோட்டம் கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டி பூசை ஆறுநாள் நடைபெற்று, ஆறாவது நாளான சூரசங்காரம் இன்று புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெறும் என்று கோவில் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (கு)

## தவறான முடிவெடுத்து இளைஞன் உயிர்மாய்ப்பு

முல்லைத்தீவு, நவ. 10
புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட சிவநகர் பகுதியில் இளைஞன் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

இதே பகுதியைச் சேர்ந்த ஜெயசீலன் கிருஸ்ணகரன் (வயது - 20) என்பவரே உயிர்மாய்த்தார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (கு19)

## கிணற்றைக் காணோம்!

### ஒட்டுசுட்டானில் சம்பவம்



முல்லைத்தீவு, நவ. 10
முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட மானுருவி என்ற கிராமத்தில் விவசாயக் கிணறு ஒன்று தாழிறங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக குறித்த கிணறு முற்றாக நிலத்தில் இறங்கியுள்ளது.

நள்இரவு 12 மணியளவில் பெரும் சத்தம் ஒன்று கேட்டுள்ளது. கடும் மழை காரணமாக பார்க்கமுடியவில்லை என்றும் காலையில் எழுந்து பார்த்தால் கிணற்றைக் காணவில்லை என வீட்டுக்காரார்கள் தெரிவித்தனர். சுற்றிவர சிமெந்தால் கட்டப்பட்ட கிணறு, கால்மிதி மற்றும் கிணற்றில் அருகில் உள்ள மோட்டர் என்பனவும் நிலத்துக்குள் முற்றாக புதைந்து காணாமற் போயுள்ளன. இந்தக் கிணற்றை நம்பியே வீட்டுத்தோட்டம் உள்ளிட்ட விவசாய செய்கையை மேற்கொண்டுவந்துள்ளோம் என்றும் குடும்பத்தினர் தெரிவித்தனர். (கு-19)

## மாவிட்டபுரம் சூரன்போர்



யாழ்ப்பாணம், நவ. 10
யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் சூரன் போர் நேற்று நடைபெற்றது.

பெருமளவான பக்த அடியவர்கள் சூழ சூரன்போர் சிறப்பாக நடைபெற்றது. (கு-27)

## நேற்றைய தொற்று 700ஐத் தாண்டியது

### உயிரிழப்பு 17

இலங்கையில் நேற்று 717 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 46 ஆயிரத்து 652 ஆக எகிறியுள்ளது. அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 6 ஆயிரத்து 689 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் மேலும் 17 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர். இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 192 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 17 பேரில் 10 ஆண்களும், 7 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்களில் 14 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இவர்களில் 8 பேர் ஆண்களும், 6 பேர் பெண்களுமாவர்.

30 வயதுக்குட்பட்டோரில் ஆண் ஒருவரும், 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்டோரில் ஆண் ஒருவரும், பெண் ஒருவருமாக 2 பேரும் உயிரிழந்துள்ளனர். (கு-22)

## 26ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



**வீரகத்தி ஜெயறூபன்**

திதி : ஷஷ்டி
(10.11.2021)

மண்மகிழ
07.08.1972

மனம் நெகிழ
29.10.1995

அன்பினால் அனைவரையும் ஈர்த்தாய்
ஆயிரம் கனவுகளுடன் வீழ்ந்தாய்
இரக்கம் எனும் சொல்லுக்கு இலக்கணமானாய்
ஈகையினால் அனைவரையும் ஈர்த்தாய்
காவியம் படைப்பாய் என எண்ணியிருந்தோம் ஆனால் நீ எம்மை
காரிருளில் மூழ்க விட்டாய்
காலம் பல கடந்தாலும் ஆறுமோ எம் நெஞ்சம்
நீங்கா துயரில் மூழ்குகிறோம்.

எழுதுமட்டுவாழ் (CR35848)(3/6) குடும்பத்தினர்

## மூன்றாம் ஆண்டு நினைவு தினம்



அன்னை மடியில்
17.05.1993

ஆண்டவன் அடியில்
10.11.2018

### அமரர் கோபாலகிருஸ்ணன் சாரங்கன்

(சப்ரகமுவ பல்கலைக்கழக 3 ஆம் வருட மாணவனும்,
யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும்)



மூன்று ஆண்டுகள் ஆனதுவோ எங்கள்
மூத்த செல்வமே சாரங்கா
பெற்றோரும் சகோதரனும் உன் திடீர் செய்தி
யறிந்து திசைமாறி நின்றிட
உற்றாரும் உறவினரும் கதிகலங்கி நின்றிட
வேகுதே எம் மனம் வெந்தணல் வீசுதே.

அன்பின் திருவுருவே எங்கள் ஆருயிரே
பண்பின் சிகரமே பாசத்தின் உறைவிடமே
சாந்தமாய் இருந்து அனைவரையும்
காந்தமாய் கவர்ந்தவனே
குறையின்றி குவலயம் தனில் வாழ்ந்த
குணக்குன்றே
பகையின்றி பாரினில் வாழ்ந்த பண்பாளனே
நட்புக்கு இலக்கணமாய் விளங்கியவனே
பொறுமையின் பொக்கிஷமே
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவனே

சாகும் வயதல்ல உந்தனுக்கு சாரங்கா
சாதனைகள் புரிந்து நம்மை சந்தோசமாக
வாழ வைத்த நீ சடுதியில் வேதனைகள்
தந்து எம்மை வெறுமையாய் விட்டுச் சென்றதேனோ

எத்தனை எண்ணங்களை எண்ணியிருந்தோம்
எம் மனதில் அத்தனையும் பகற்கனவாய் போனதேனோ
சப்ரகமுவ பல்கலையில் சந்தோசமாக பட்டமளிப்பு
விழா காண்போம் என்றிருந்தவேளை பாதகச் செயல் நிகழ்ந்ததேனோ
அரசசேவையில் நீ கடமைபுரியும் அழகை
காணவிருந்த வேளை அரைவாசியில் உன் வாழ்வு முடிந்ததேனோ

திருமண நாள் தன்னை சிறப்புடன் காணவிருந்தவேளை
உன் வாழ்வு திசைமாறிப் போனதேனோ
பார்க்கும் இடமெல்லாம் உன் உருவம் தான்
தோன்றுவது போல் இருக்குதையா சாரங்கா
கேட்கும் ஒலிகள் யாவும் உன் குரல்
கேட்பது போல் இருக்குதையா சாரங்கா
கனவில் வந்து காட்சிதரும் நீ
நேரில் வந்து காட்சிதர மாட்டாயோ சாரங்கா

நீதியுடன் வாழ்ந்த உன் வாழ்வதனை
நீரின் வடிவத்தில் வந்த காலனவன்
நீதியின்றி பறித்ததேனோ
நீரினைப் பிரிந்த மீன் உயிர் வாழமுடியாமல்
துடிப்பதுபோல் உன் பிரிவால் இவ்வுலகினில்
உயிர் வாழ முடியாமல் துடிக்கின்றோம் ஐயா சாரங்கா
எங்கள் அன்புச் செல்வமே உனது ஆத்மா சாந்தியடைய
இறைவனைத் துதிக்கின்றோம் நாம்.

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!*

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 17980) (2.6)

## பதிவுக்கட்டணம் வைப்புச் செய்ய வேண்டிய கணக்கு இலக்கம் திருத்தம்

01.11.2021 அன்று பிரசுரிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 2022 என்ற விளம்பரத்தின் பதிவுக்கட்டணத்தை வைப்புச் செய்ய வேண்டிய சரியான கணக்கு இலக்கம் 8500003900026, மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆகும். ஏனைய நிபந்தனைகள் எதிலும் மாற்றம் இல்லை.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

(CR 5876) 1-6

## 10ஆம் ஆண்டு நினைவு



மனம் மகிழ
11 . 10 . 1927

மனம் நெகிழ
02 . 11 . 2011

வட்டூர் வடக்கின் வரலாற்று நாயகன்

### அமரர் வேலுப்பிள்ளை பொன்னம்பலம்

(ஸ்தாபகர் - பாக்கியரத்தினம் கட்டடப்பொருள் விற்பனை நிலையம் - சங்கானை, தரன் ரேடர்ஸ், யாழ்ப்பாணம்)
பணிப்பாளர் Jet Steel Colombo)

*திதி : ஸப்தமி (10.11.2021)*

உழைப்பின் உச்சிகளைத் தொட்டவரே - எங்கள்
உள்ளத்துள் புகுந்தின்றும் வாழ்பவரே
தழைத்தோங்க அரும்பணிகள் புரிந்தவரே - எங்கள்
அறப்பணியின் அர்த்தமாய்த் திகழ்ந்தவரே
களைப்பின்றிப் பிறர் கரங்கள் நிறைத்தவரே - எங்கள்
வேலுப்பிள்ளை பொன்னம்பலம் பெருந்தகையே
திழைத்திருந்த வாழ்வை விட்டு இறையடியில் நீர் புகுந்து
பத்தாண்டும் நிறைந்ததையா உங்களை
- நாம் நினைவுகூருவோம்.

வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

(cs.41017) (2.6)

குடும்பத்தினர்.

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**
**உப அலுவலகம், சுன்னாகம்.**
**வட்டாரம் - 05, மயான வீதி, ஆதன இல - 82**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட **மயான வீதி, சுன்னாகம்** எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம்-05, மயான வீதி, ஆதன இல:82ல் அருளானந்தம் கைம்பெண் செல்லம்மா எனும் பெயரில் உள்ளது. பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று கந்தரோடை இறை, வலிகாமம் தெற்கு பிரதேசசெயலர் பிரிவு, **J/200** கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள "வத்தாவத்தை" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு **06** உடைய ஆதனமானது **2012.03.14** ஆம் திகதிய **8735** ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

**அதன் எல்லைகளாக,**
**கிழக்கு** - தம்பிஐயா வாமதேவனின் ஆதனம்
**வடக்கு** - ஒழுங்கை
**மேற்கு** - சிவபாதசுந்தரம் விக்கினேஸ்வரியினதும் மறுபேரினதும் ஆதனம்
**தெற்கு** - ஒழுங்கை

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் Mr.S.சிறிதுர்க்கநாதன் அவர்களால் 2021.08.14இல் அளந்து தயாரிக்கப்பட்ட 0338 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 ஆகிய நிலப்பரப்பு 05 குழி 05.51 ஆகும். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் அவர்கள் மூலம் 2013.03.09 ஆம் திகதிய 9362 ஆம் இலக்க அறுதி உறுதியால், கந்தரோடை மேற்கு,சுன்னாகம் என்னும் இடத்தை சேர்ந்த பரமநாதன் பெண் பூங்கொடி (566350807V) எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது பரமநாதன் பெண் பூங்கொடி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

(cs 41019) (2.6)



## மருத்துவர் சக்திபாலனின் 31ஆம்நாள் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,நவ.10

தொல்புரம் மேற்கைச்சேர்ந்த மருத்துவக் கலாநிதி சக்திவடிவேல் சக்திபாலனது 31 ஆவது நாள் நினைவேந்தல், வலி. மேற்கு பிரதேசசபையின் மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் பொது மருத்துவமனையில் பணிபுரிந்துகொண்டு இருந்த நிலையில், மாரடைப்புக் காரணமாக மருத்துவர் சத்தியபாலன் கடந்த மாதம் உயிரிழந்திருந்தார்.

இந்தநிலையில் அவரது 31ஆவதுநாள் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. ஈகச் சுடரேற்றி, அன்னாரின் திருவுருவப்படத்துக்கு மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் அன்னாரின் குடும்பத்தினர், வலி. மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் த.நடனேந்திரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், மருத்துவர்கள், சட்டத்தரணிகள், பிரதேசசபை உறுப்பினர்கள், பேராசிரியர்கள், கல்விமான்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஒ-4-27)

## விற்பனைக்கு

MF - 135 ரக்ரர் (270 - XXXX)
SUZUKI ALTO 800 கார்
(CAD - XXXX) விற்பனைக்கு

(akn 15498 (2.6)

**077 240 4912**

## மரண அறிவித்தல்



சச்சிதானந்தன் (Consultant TOTAL Energies Denmark), டாக்டர் ஆர். பிரதாபன் (Consultant Obstetrician and Gynaecologist) ஆகியோரின் மாமனாரும் ... ஆகியோரின் பேரனும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு பொரளை, ஜெயரத்தன Restpect மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 5.30 மணிக்கு கனத்தை மையவாடியில் தகனம் செய்யப்படும்.**

தகவல்
சாந்தினி (மகள்) +94777680708
சாமினி (மகள்) +94714852269

(CR 5875) 6

# மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 04 . 1947



இறப்பு 06 . 11 . 2021

## கந்தையா நடராஜா (ஜெயராஜா)

பருத்தித்துறை 3ஆம் குறுக்குத்தெருவை சேர்ந்த முன்னாள் பிரபல கடலுணவு ஏற்று மதியாளர் கந்தையா நடராஜா (ஜெயராஜா) கடந்த (06.11.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நவாலி சங்கானையைச் சேர்ந்த தம்பிராசா - பூமணி தம்பதியரின் மகனும், தங்கலட்சுமி (தேவி)யின் கணவரும், ஈஸ்வரலதா (ஜேர்மனி), இராஜலட்சுமி (சாந்தி - வெள்ளவத்தை), தர்மராஜா (சுவிஸ்), யோகராஜா (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், செல்வராஜா (ஜேர்மனி), வாசுதேவன் (வெள்ளவத்தை), பிரேமகாந்தி (சுவிஸ்), சிவரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வினித், விநோத், விநோதா (ஜேர்மனி), திவாகர் (வெள்ளவத்தை), விதுஷா, விருஷிகன், பிரவின் (சுவிஸ்), விபூஜா, அக்ஷிகன், விக்ஷா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இராஜதுரை, மகேஷ்வரி (சிங்கப்பூர்), தங்கவேல் (தேவர்), வரதராஜா (குட்டி) மற்றும் இராஜேஸ்வரி (பவானி) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கமலம் (மரியரோஜா) மற்றும் பரமலிங்கம், காலஞ்சென்ற வைத்திலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2021) புதன்கிழமை நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**3 ஆம் குறுக்குத்தெரு,**
**பருத்தித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cr 35845) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 12 . 1948



இறப்பு 07 . 11 . 2021

## திருமதி விஜயலட்சுமி மகேந்திரன்

(இளைப்பாறிய ஆசிரியை, காரைநகர், நெல்லியடி, ரொரண்டோ)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், ரொரண்டோ மற்றும் ஒட்டாவா கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி மகேந்திரன் கடந்த (07.11.2021) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் பொன்னம்பலம் கனகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் வள்ளியம்மாள் தம்பதிகளின் அன்பு மருமகளும், மகேந்திரன் (பிராந்திய மேலாளர் - நெல்சந்தைப்படுத்தல் சபை) அவர்களின் அன்பு மனைவியும், விஜயேந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்சினி, சாரங்கி ஆகியோரின் அன்பு மாமியும், லோகேஷ், கிஷான், மித்திரன், மாறன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், நாகேஸ்வரி (அவுஸ்திரேலியா), தனலட்சுமி (இலங்கை), பரமேஸ்வரன் (பிரான்ஸ்), உருத்திரன் (லண்டன்), சுந்தரலட்சுமி (இலங்கை), உமாபதிகுமார் (லண்டன்), விக்கினேஸ்வரி (கனடா), இந்திரா (கனடா), புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஒட்டாவா, கனடாவில் இன்று (10.11.2021) புதன்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**
**து.தனலட்சுமி (இலங்கை)**
**077 916 7210**

(CS 41020) (3/6)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### 2022 ஆம் ஆண்டிற்கான 1வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், பொதுமலசல கூடங்கள் என்பனவற்றை 2022.01.01ஆம் திகதி தொடக்கம் 2022.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 10.11.2021 – 22.11.2021 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 23.11.2021 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 23.11.2021 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ. இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 12,479,775.00 | |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 188,265.00 | 250.00 |
| 4 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 70,455.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 28,015,103.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 52,545.00 | |
| 3 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 706,398.00 | 250.00 |
| 4 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 219,450.00 | 250.00 |
| 5 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 73,632.00 | |
| 6 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 57,750.00 | |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 179,025.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40,500.00 | 250.00 |

[illegible] சம்பந்தமான மேலதிக விபரங்களை 2021.10.07 ஆம் திகதிய வலம்புரி, உதயன், தினக்குரல் [illegible]களிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பார்வையிடலாம்.

தவிசாளர்
[illegible] பிரதேசசபை.

(CR 35853) 1-6

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை உப அலுவலகம், சுன்னாகம்.**
**வட்டாரம் - 04, புனித அந்தோனியார் வீதி,**
**ஆதன இல - 69/15**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத் திற்குட்பட்ட புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம் 04, **புனித அந்தோனி யார் வீதி,** ஆதன இல:69/15ல் திருமதி K.மனோன்மணி cld by வைத்தி லிங்கம் பாக்கியம் எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு சொக்கலிங்கம் சண்முகலிங்கம் முகதாவில் வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை, வலிகாமம் தெற்கு பிரதேசசெயலர் பிரிவு, J/199 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள **"கொட்டலையான்சீமா"** எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 02 குழி 11.25 உடைய ஆதனமானது 2008.07.15 ஆம் திகதிய 2989 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

**அதன் எல்லைகளாக,**
**கிழக்கு** - ஒழுங்கையும் கையொழுங்கையும்
**வடக்கு** - கையொழுங்கை
**மேற்கு** - சின்னக்குட்டி சரவணைக்கு உரிய ஆதனமும், கையொழுங்கையும்
**தெற்கு**- கையொழுங்கை

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் Mrs.N.சுஜிகாந்தன் அவர்களால் 2021.10.23இல் அளந்து தயாரிக்கப்பட்ட 74 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 ஆகிய நிலப்பரப்பு 02 குழி 06.44 ஆகும். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சொக்கலிங்கம் சண்முகலிங்கம் அவர்கள் மூலம் 2008.07.15 ஆம் திகதிய 2989 ஆம் இலக்க அறுதி உறுதியால், 69/1, சூளானை, சுன்னாகம் என்னும் இடத்தை சேர்ந்த தங்கவேலு பெண் சிறீரஞ்சனி **(196181400849)** எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப் பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது தங்கவேலு பெண் சிறீரஞ்சனி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

(cs 41018) (2.6)

# முன்பள்ளி திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், நவ.10

மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்ட புனித பேதுருவானவர் முன்பள்ளியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் திறந்து வைத்தார். (ச-20)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### விவசாய உயிரியல் துறை சான்றிதழ் கற்கை நெறி

1. காளான் உற்பத்தி மற்றும் பதனிடல் தொழில்நுட்பம்.
2. மண்புழுத் தொழில்நுட்பம்

விவசாயஉயிரியல் துறை விவசாயபீடத்தினால் நடாத்தப்படவுள்ள சான்றிதழ் கற்கைநெறிக்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை**

- தரம் 9 வரை கற்றிருத்தல்.

**கற்கை நெறி தொடர்பான விபரம்**

- ஒவ்வொரு கற்கை நெறிக்குமான கட்டணம் ரூபா 8000/=
- மொழிமூலம் - தமிழ்
- கற்கை நெறிக்கான காலம் :- 04 மாதங்கள் (வார இறுதி நாட்கள் )

கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவத்தை www.jfn.agri.ac.lk யாழ். பல்கலைக் கழக இணையத்தளத்தில் அல்லது யாழ் பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பதாரிகள் தமது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் தமது தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவண பிரதிகளை 24.11.2021 முன்னர் பீடாதிபதி, விவசாய பீடம், யாழ் பல்கலைக்கழகம், கிளிநொச்சி வளாகம், அறிவியல்நகர், எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மேலதிக தகவல்களுக்கு இணைப்பாளர், கலாநிதி. க. பகீரதன் அவர்களுடன் 0212060171, 0776969511, 0718617928 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

(cr 5865) (2.6)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தவனம் தேவசிகாமணி

(திதி : 10.11.2021)

ஆண்டு இரண்டு பறந்தோடி
நினைவுகள் ஒவ்வொன்றாய்
நிழல் படமாய் எம் திரையில்
நீள் ஒளியாய் காட்சி தர
நிஜத்தை இழந்த தவிப்போடு
நாமும் தேடுகின்றோம்
திதி பாத்து துதித்த வண்ணம்
இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இரண்டாவது நினைவுத் திதி 10.11.2021 செவ்வாய்க்கிழமை வீட்டுப் பூஜை நடைபெறும் கந்தசஷ்டி விரதம் காரணத்தால் 12.11.2021 வெள்ளிக்கிழமை வீட்டில் மதிய போசன நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக சகலரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 913 8996 குடும்பத்தினர்

(CR 35849) (3.6)

# காரைநகர் பிரதேசசபைக்கு தவிசாளர் தெரிவு இன்று

யாழ்ப்பாணம், நவ. 10

காரைநகர் பிரதேசசபைக்கு புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு காரைநகர் பிரதேசசபை சபா மண்டபத்தில், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாஸ் பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பை (ரெலோ கட்சியை) பிரதிநிதித்துவப்படுத்தி 2018ஆம் ஆண்டு முதல் தவிசாளராக இருந்த கேதீஸ் வரதாஸ் சுகவீனம் காரணமாக கடந்த மாதம் உயிரிழந்தார். இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இன்று தெரிவு இடம்பெறவுள்ளது. (ம-50)

## வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல்

எமது சங்கத்தின் ரூபா 100.00பங்குப்பணம் செலுத்தி ஒரு வருடம் பூர்த்தியான 30.09.2021 திகதியில் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதிபெற்ற அங்கத்தவர்களின் பெயர். விபரங்கள் உள்ளடங்கிய வாக்காளர் பட்டியல் சகல கிளை நிலையங்களிலும் 08.11.2021 தொடக்கம் 23.11.2021 வரை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. என்பதனை அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
தென்மராட்சி கிழக்கு ப.நோ. கூ. சங்கம் (வ.து)
கொடிகாமம்

(CR35851) (3/6)

## Our Deepest Sympathy

### Professor K. Balasubramaniam



Emeritus Professor of Biochemistry (1984-2003)
Former Dean (1988-1994) Faculty of Medicine, University of Jaffna

University of Jaffna community will always remember you Sir!

May his soul rest in peace.

Faculty of Medicine Teachers' Association (FMTA)
University of Jaffna

(cs 41022) (2.6)

## திறப்பு விழா

மன்னார், நவ.10

மன்னாரில் அடம்பன் பகுதியில் பாற் பொருள் விற்பனை நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. மாந்தைமேற்கு மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. (ஒ-ரி1-60)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 08.11.2002
கந்தனின் அடியில் 05.11.2016

இராஜவீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

### செல்வன் ஆனந்தகுமார் ஜெயபிரகாஷ் (பிரகாஷ்)

(யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவன்)

திதி : ஐப்பசி ஷஷ்டி (10.11.2021)

மறைந்தோடியது ஐந்து ஆண்டுகள்
- பிரகாஷ்
மறக்கத்தான் முடியுமா? உன் சிரித்த
- முகம்
ஆறுது இல்லை எம்மனம் கண்ணீரால்
- உன்
ஆன்மா சாந்தி பெற அனுதினமும்
வேண்டுகின்றோம் இறைவனை

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா, தம்பி, தங்கை.
தகவல்: தந்தை [ஆனந்தன்]

(cs 40966) (2.6)

### கனகாம்பிகை...

கைக்குளம் நேற்று இரவிலிருந்தும் வன்னேரிக்குளம் நேற்றிலிருந்தும் வான்பாய்கின்றன. மழை தொடரவுள்ளதால் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

தொடர் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்றுக்காலை 7 மணி வாசிப்பின் அடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்துக்கான நீர்ப்பாசன குளமான 36 அடி அடைவுமட்டம் கொண்ட இரணைமடுக் குளம் 24 அடி இரண்டு அங்குலமாக உயர்ந்துள்ளது. 26 அடி அடைவுமட்டம் கொண்ட கல்மடு குளம் 24 அடி மூன்று அங்குலமாகவும், 12 அடி அடைவுமட்டம் கொண்ட பிரமந்தனாறு குளம் 9 அடி ஓர் அங்குலமாகவும் அதிகரித்துள்ளது.

19 அடி அடைவுமட்டம் கொண்ட புதுமுறிப்பு குளம் 17 அடி ஐந்து அங்குலமாகவும், 25 அடி அடைவுமட்டம் கொண்ட அக்கராயன் குளம் 18 அடி மூன்று அங்குலமாகவும்,10 அடி அடைவுமட்டம் கொண்ட கரியாலை நாகபடுவான் குளம் 4 அடி 8 அங்குலமாகவும், 8 அடி ஆறு அங்குல அடைவுமட்டம் கொண்ட குடமுருட்டிக் குளம் 6 அடி ஒன்பது அங்குலமாகவும் உயர்ந்துள்ளது.

இதேவேளை, 10 அடி ஆறு அங்குலம் கொள்ளளவு கொண்ட கனகாம்பிகைக்குளம் அடைவுமட்டத்தை அடைந்து 5.5 அங்குலம் வான் பாய்ந்து வருவதுடன், 9 அடி ஆறு அங்குலம் அடைவுமட்டம் கொண்ட வன்னேரிக்குளம் அடைவுமட்டத்தை அடைந்து 3 அங்குலம் வான் பாய்ந்து வருகின்றது. இந்த நிலையில், நீர்நிலைகள், நீர்வழிந்தோடும் பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்குமாறும், தாழ் நிலப் பகுதிகளில் உள்ள மக்கள் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இடர் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கிராம அலுவலர் ஊடாக அல்லது, பாதுகாப்புத் தரப்பினர் ஊடாக பாதுகாப்பை பெற்றுக் கொள்ளுமாறும், மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (த-113)

### கொரோனா...

னாத்தொற்று ஏற்பட்டுள்ளது. மன்னாரில் 26 பேருக்கு கொரோனாத்தொற்று ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

**வவுனியா**

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின. அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மேலும் 42 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

**மன்னார்**

மன்னாரில் நேற்றுமுன்தினம் 26 பேருக்கு கொரோனா உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்களில் மன்னார் பொது மருத்துவமனையில் 6 பேருக்கும், மாந்தை மேற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும், நானாட்டான் பிரதேச மருத்துவமனையில் 4 பேருக்கும், முருங்கன் ஆதார மருத்துவமனை மற்றும் நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு ஆகியவற்றில் தலா 3 பேருக்கும், மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு மற்றும் பெரிய பண்டிவிரிச்சான் பிரதேச மருத்துவமனை ஆகியவற்றில் தலா 2 பேருக்கும், முசலி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். மன்னாரில்

நவம்பர் மாதத்தில் இதுவரை 154 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள் ளது.

அத்துடன், தாராபுரத்தில் அமைந்துள்ள கொரோனாத்தொற்றாளர்களுக்கான இடைத்தங்கல் சிகிச்சை நிலையத்தில் வெள்ளீர் காரணமாக, அங்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தோர் பாதுகாப்புக்கருதி அவர்களின் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-110,60)

### யாழிலிருந்து...

பட்ட கடுகதி ரயில் வவுனியா, தாண்டிக்குளத்தை அண்மித்தபோது ரயிலின் 'கொட்போக்ஸ்' பகுதியில் திடீரென தீ பிடித்துள்ளது. இதனை அவதானித்த ரயில் ஊழியர்கள் விரைந்து செயற்பட்டு தீயணைக்கும் பம்பியை செயற்படுத்தி தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்து அணைத்தனர்.

இதனையடுத்து ரயிலின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு சுமார் ஒரு மணித்தியால தாமதத்தின் பின்னர் குறித்த ரயில் கொழும்பு நோக்கிய பயணத்தை தொடர்ந்தது. (த-18)

### எரிபொருள்...

உள்ளது." என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

வலுசக்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உலக சந்தையில் கடந்த 5 மாதங்களில் எரிபொருள்களின் விலை 27 வீதத்தால் அதிகரித்துள்ளது. எமது நாட்டு மக்கள் பொருளாதாரப் பிரச்சினையால் ஏற்கனவே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மேலும் சுமையை அதிகரிக்கக்கூடாது என்பதாலேயே நாம் விலை அதிகரிப்பை மேற்கொள்ளவில்லை. எனினும், எதிர்காலத்தில் அந்த சுமையை மக்களே தாங்கிக்கொள்ள நேரிடும்.

இந்தமாதம் பாதீடு முன்வைக்கப்பட வுள்ளது. எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கு நிவாரணம் வழங்குவதா அல்லது எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதா அல்லது எரிபொருள்கள் மீதான வரியைக் குறைப்பதா என்பதை நிதி அமைச்சரே தீர்மானிக்க வேண்டும்." - என்றார்.

2022 ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி முன்வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-44)

### கிளிநொச்சி...

என்று பொலிஸார் தெரிவித்தனர். பரந்தன் ஏ-9 வீதியில் சிமெந்து இறக்கிவிட்டு வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பார ஊர்தியின் பின்புறமாக நேற்றுமுன்தினம் இரவு 11.40 மணியளவில் மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குமரபுரம் பகுதியை சேர்ந்த மகேந்திரராசா யூட்கபிசன் (வயது - 29) மற்றும் பரந்தன் பகுதியை சேர்ந்த சவுந்தானந்தன் காந்தீபன் (வயது - 39) ஆகியோரே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இருவரில் ஒருவர் நேற்று தனது பிறந்தநாளை கொண்டாடவிருந்தநிலையில், விபத்து இடம்பெற்றுள்ளது என்று உறவினர்கள் தெரிவித்தனர். உயிரிழந்தவர்களின் சடலம் கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-6,214)

### யாழ்.கிளி.....

என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்தார். தொடர் மழை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலைகள் நேற்று மூடப்பட்டன.

இந்தநிலையில், மழை வடக்கின் வவுனியா தவிர்ந்த நான்கு மாவட்டங்களிலும் பெய்துவருவதால், தாக்கம் அதிகமாக வுள்ள மேற்குறித்த மூன்று மாவட்டங்களிலும் பாடசாலைகள் இன்று மூடப் படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-26)

### திடீரென...

நேற்றுக்காலையே திடீரென்று விடுக்கப்பட்டதால், அதற்கு முன்னரே பாடசாலைகளுக்குச் செல்லத் தயாராகவிருந்த ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் இடர்பாடுகளை எதிர்கொண்டனர்.

குறிப்பாக, தீவகம் உட்பட தூரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு பணிக்குச் செல்லும் ஆசிரியர்கள் அதிகாலை 5 மணிக்கே புறப்பட்டுச் சென்றுவிட்டநிலையில், காலை 6 மணிக்குப் பின்னரே பாடசாலைகள் இல்லை என்ற தகவல் கிடைத்ததால் அந்த ஆசிரியர்கள் இடர்களை எதிர்கொண்டனர். சிலர் பாடசாலைகளுக்குச் சென்றுவிட்டநிலையிலும், இன்னும்சிலர், பாடசாலைகளுக்குச் சென்று கொண்டிருக்கும்போதும் பாடசாலை இல்லை என்ற தகவல் கிடைத்து அலைக்கழிந்து வீடுசென்றனர் என்று தெரிவிக்கப் பட்டது. (த)

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக"

## மரண அறிவித்தல்

### விநாயகன் சண்முகலிங்கம் (சண்முகராசா)



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விநாயகன் சண்முகலிங்கம் (சண்முகராசா) நேற்று (09.11.2021) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகன் அன்னப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லாச்சியின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், குமாரசாமி மற்றும் தனலட்சுமி காலஞ்சென்ற நாகராசா மற்றும் தங்கராசா, மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுபாசினி, காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் தர்சினி, தனுஜா, திவாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜேசுதாஸ், நிதி லேகா, காலஞ்சென்ற சுதனேஸன் மற்றும் ஐங்கரன், சோபிகா ஆகியோரின் மாமனாரும், அருள்வாணன், ஓவியன், குயிலிசை, ரஸ்மிகா, அனபினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 10.11.2021) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அம்பலவி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 17989) 1-6

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னராசகுமாரி சீவரெத்தினம்

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பகவிநாயகர் கோவில் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னராசகுமாரி நேற்று (09.11.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரட்ணம் அன்னம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா சரஸ்வதி தம்பதியரின் அருமை மருமகளும், சீவரெத்தினம் (ஓய்வுபெற்ற நோயாளர் காவு வண்டி ஓட்டுனர்) அவர்களின் அருமை மனைவியும், கணேஸ்வரன் (லண்டன்), சிவகுமாரி (லண்டன்), கவிதா (நோர்வே), சுகிர்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஜனி (லண்டன்), மதுரா (லண்டன்), கருணாகரன் (நோர்வே), காலஞ்சென்ற ஜகரூபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கலைமகள், ரேவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோகரனின் (பிரான்ஸ்) அன்பு மைத்துனியும், ஜபிக்கா, ஜெய்ஸ்னன, ஹேஜினி, கிமாலன், கிருஷான், டிலுக்ஷன், கபிஷன், லெக்ஷிகா, துவாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சஜந், சஜித், சாருத், சவின் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2021) முற்பகல் 10.00 மணியளவில் நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் கோவில் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
செ.சீவரெத்தினம் (கணவர்)

(CS 17988) 1-6

## கொட்டித்....

அவர்களில் 164 குடும்பங்களைச் சேர்ந்த 568 பேர் இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் தங்கியுள்ளனர் என்று இரண்டு மாவட்டச் செயலகங்களினதும் தகவல்கள் தெரிவித்தன.

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் தோன்றிய தாழமுக்கம் மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றநிலையில், இவ்வாறு மழை கொட்டித்தீர்க்கிறது. நேற்றுமுன்தினம் நள்ளிரவு கொட்டத்தொடங்கிய கனமழை நேற்று முற்பகல் சற்றுக் குறைந்திருந்தது. பிற்பகல் சிற்சில இடங்களில் வானம் வெளித்திருந்தது. இந்தநிலையில், மாலைவேளையிலிருந்து மீண்டும் மழை பெய்துகொண்டிருக்கின்றது. தாழமுக்கம் காரணமாக இன்றும் மழை நீடிக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்த நிலையில், குறித்த இரு மாவட்டங்களிலும் மக்கள் பெரும் அல்லோலகல்லோலப் படுகின்றனர். மக்களின் இயல்பு வாழ்வு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அதனால் மக்கள் அத்தியாவசிய தேவைகளைத்தவிர, ஏனைய வேலைகளைக் கைவிட்டு வீட்டில் முடங்கியுள்ளனர்.

வவுனியாவில் மாவட்டத்தில் வடக்கில் மாத்திரம் நேற்றுவரை சிறு மழை பெய்துள்ளது. பாதிப்பு ஏதுமில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், கனமழை, வெள்ளம் காரணமாக நேற்றுமாலை 6.30 மணிவரை 7 ஆயிரத்து 584 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 508 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று, மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இந்தப் பாதிப்பு பற்றிய அறிக்கை கிடைக்கப்பெற்றது.

எனினும், 139 குடும்பங்களைச் சேர்ந்த 463 நபர்கள் மாத்திரமே இடம்பெயர்ந்தவர்கள் என்றவகையிலே தற்காலிக இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தேவையான உணவு வசதிகள் உட்பட ஏனைய வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளை பிரதேச செயலர்கள் மேற்கொண்டுவருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (நேற்றுமுன்தினம்) இரவு தொடக்கம் பெய்த மழை காரணமாக 243 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

இன்று அதிகாலை(நேற்று) வெளியான வளிமண்டலவியல் திணைக்களத்தினுடைய அறிக்கையின்படி இன்றும்கூட வடக்கு மாகாணத்தில் 150 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மிகக்குறுகிய காலத்திலேயே மழைவீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக மாவட்டத்தில் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அநேகமான வீதிகள், வீடுகள், பொது இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக சேத விவரங்களை மதிப்பீடு செய்து வருகின்றோம். அதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் ஒத்துழைத்து செயற்பட்டு வருகின்றன.

### சிறார்கள் கவனம்

நீர் நிலைகள் பல நிரம்பியுள்ளமையால், சிறுவர்களை மிகப் பாதுகாப்பாக பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம். கடந்த காலங்களில் இவ்வாறான நேரங்களில் பல சம்பவங்கள் ஏற்பட்டிருந்தன. அவற்றை அடையாளப்படுத்தி மக்களுக்கு தெரியப்படுத்த பிரதேச செயலர்கள் மற்றும் உள்ளூராட்சி சபையினரை கேட்டிருக்கின்றோம்.

மேலும், வெள்ள நிலைமை தொடருமிடத்து சுகாதார நிலையை கவனத்தில் எடுத்து அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஆகவே, யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம், பிரதேச செயலர்கள், உள்ளூராட்சி சபையுடன் இணைந்து வெள்ள நிலைமையை கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். வெள்ளப்பாதிப்பின் பின்விளைவுகளை எதிர்கொள்ளக்கூடிய வகையில் ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றோம். பொதுமக்கள் எமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்பட வேண்டும். பொதுமக்கள் இயற்கை இடரிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதேவேளை கடல் சீற்றம் கடும் காற்று காரணமாக கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது நல்லது- என்றார்.

### மன்னார்

கன மழை காரணமாக, மன்னார் மாவட்டத்தில், 3 ஆயிரத்து 501 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 350 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் 3 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் மன்னார் மாவட்ட உதவி பணிப்பாளர் கே.திலீபன் தெரிவித்தார்.

பாடசாலைகளே நலன்புரி நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 3 ஆயிரத்து 2 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 631 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 89 பேர் 2 தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 325 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 56 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் நலன்புரி நிலையம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேரும், முசலி பிரதேசச் செயலர் பிரிவில் 166 குடும்பங்களைச் சேர்ந்த 628 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும், மேற்குறித்த பகுதிகளில் எவரும் இடம்பெயரவில்லை. - என்று திலீபன் தெரிவித்தார்.

இதேவேளை, அவ்வாறு இடம்பெயர்ந்த நிலையில், எழுத்தூர் பகுதியில் 41 குடும்பத்தைச் சேர்ந்த 162 பேரும், சௌத் பார் கிராமத்தில் 3 குடும்பத்தைச் சேர்ந்த 12 பேரும், விடத்தல் தீவு கிழக்கு பகுதியில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேரும், தலைமன்னார் பியர் பகுதியில் 33 குடும்பங்களைச் சேர்ந்த 101 பேரும், தலைமன்னார் கிராமத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 25 பேரும், செல்வ நகர் கிராமத்தில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேருமாக 98 குடும்பங்களைச் சேர்ந்த 361 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவர்கள் சுகாதாரத் திணைக்களத்தின் உதவியுடன், சுகாதார நடை முறைகளுக்கு ஏற்ப பிரதேச செயலகங்கள் ஊடாக பராமரிக்கப்பட்டு வருகின்றனர். மாவட்டத்தின் பல கிராமங்கள் இவ்வாறு வெள்ள நிலைமையை எதிர் நோக்கியுள்ள போதிலும், அவர்கள் இடம்பெயர்ந்து முகாம்களுக்கு செல்லாது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

### 15 பாடசாலைகள் மூடப்பட்டன

வெள்ள இடர் காரணமாக மன்னார் கல்வி வலயத்துக்கு உட்பட்ட 13 பாடசாலைகளும், மடு வலயத்தில் உள்ள 2 பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

கிராமங்களுக்குள் சென்றுள்ள வெள்ளத்தை வெளியேற்ற நகர சபை, பிரதேச சபை, பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகம், நீர்ப்பாசனத் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களுடன் இணைந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், மழை தொடர்ச்சியாக பெய்துவருவதால் குறித்த நடவடிக்கை சவாலாக உள்ளது.

### நீரில் மூழ்கின பயிர்நிலங்கள்

இதேவேளை, தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக மாவட்டத்தின் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மாவட்டத்தில் 5ஆயிரத்து 700 ஏக்கர் வயல் நிலங்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன. புழுதி வேளாண்மையில் ஈடுபட்டிருந்த பல வயல் நிலங்கள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதன்படி, மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 2ஆயிரத்து 580 ஏக்கர், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 990 ஏக்கர், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 180 ஏக்கர் மற்றும் மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 560 ஏக்கர் புழுதி வேளாண்மையும் பாதிக்கப்பட்டுள்ளது.

மக்கள் அவதானத்துடன் இருப்பதுடன், இரவு வேளைகளில் அதிகூடிய மழை பெய்யும் பட்சத்தில் கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு அருகில் உள்ள இடைத்தங்கல் முகாம்களில் சென்று பாதுகாப்பை பெற்றுக்கொள்ள முடியும். கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்துடனும் தொடர்புகொள்ள முடியும். - என்று தெரிவித்தார்.

(து-20,26,56,213,60)

## முல்லையில்...

மக்கள் பாதிக்கப்படவில்லை. 26 குளங்கள் வான்பாய்கின்றன. பெரியளவிலான பாதிப்புக்கள் பதிவாகவில்லை என்று மாவட்ட செயலர் க.விமலநாதன் தெரிவித்தார். வடக்கு கிழக்கு பருவப்பெயர்ச்சி மழை தொடர்பிலான முன்னாயத்தக் கூட்டம் ஒன்று மாவட்ட செயலர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் மழை பெய்துகொண்டிருக்கின்றது. கடந்த இரவு 56.9 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளன.

எந்த விதமான இடர்களும் இதுவரை ஏற்படவில்லை. பொதுவாக மாகாண நீர்ப்பாசனத்தின்கீழ் இரண்டு குளங்கள் வான்பாய்கின்றன. பழையமுறிகண்டி, மருதங்குளம் இரண்டும் வான்பாய்கின்றன. மாவட்டத்திலுள்ள ஏனைய குளங்கள் நீர் தேக்கி வருகின்றன. 20 குளங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழும், 206 சிறு குளங்கள் கமநலசேவை திணைக்களத்துக்குக் கீழும் உள்ளன. அவற்றில் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழுள்ள 2 பெரிய குளங்களும், கமநலசேவைத் திணைக்களத்தின் கீழுள்ளவற்றில் 24 சிறிய குளங்களுமாக மொத்தம் 26 குளங்கள் வான்பாய்கின்றன. இதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இன்றைய கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தின் படி 5 குழுக்களாக பிரித்து அதற்குள் திணைக்களங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. குழுக்களுக்குரிய அதிகாரங்களை வழங்கியுள்ளோம். எதிர்காலத்தில் ஏற்படுகின்ற இடரின்போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துள்ளோம் -என்று தெரிவித்தார். (து-19)

## சீரற்ற...

வரை 15 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வெள்ள நீரில் மூழ்கி 9 பேரும், மண்சரிவில் சிக்குண்டு நால்வரும், மின்னல் தாக்கி இருவருமே இவ்வாறு பலியாகியுள்ளனர்.

அத்துடன் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவால் 960 வீடுகள் பகுதியளவு சேமடைந்துள்ளன. மேலும் சில வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன. சீரற்ற காலநிலையால் 23 ஆயிரத்து 600 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (து-44)'

## நீர்த்தடுப்பணைகளில்...

சிறிய கதவுகள் ஆறும் தற்சமயம் திறந்து விடப்பட்டுள்ளன. அதன்படி, தொண்டைமானாறு தடுப்பணையில் 12 கதவுகளும், அரியாலை தடுப்பணையில் 28 கதவுகளும், அராலி தடுப்பணையில் 10 கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன என்று தடுப்பணைகளுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார்.

எனினும், மழைநீர், கடலைச் சேர்வதில் மிகுந்த தாமதம் ஏற்பட்டுள்ளது. கடல் மீதுள்ள தாழமுக்கம் காரணமான இயற்கைச் சமநிலையால், கதவுகளின் எதிர்ப்புறமுள்ள கடல்நீரும் அணைகளுக்குள்ளேயுள்ள தண்ணீர் மட்டமும் ஒரே அளவிலேயே அதாவது 3 அடி உயரத்தில் காணப்படுகின்றது. அதனால் அணைக்குள்ளிருந்து தண்ணீர் வெளியேறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதனால், 'கடல் நீர்மட்டம் குறைவடைந்த பிறகே, மழைநீர் வெளியேறும் வீதம் அதிகரிக்கும்' என நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (து-11)

## 36 மணித்தியாலங்களுக்கு...

இன்றிரவு (நேற்று) 7.30 லிருந்து சுமார் 36 மணித்தியாலங்களில் இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கு அருகாக மேற்கு வடமேற்கு திசையில் கடந்து தமிழகத்தை நோக்கிச் செல்கின்றது. எனவே வடக்கில் மழை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது 50 தொடக்கம் 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும். எனவே சாரதிகள் அவதானமாகச் செயற்படுவதோடு, மின்சார வடங்கள் தொடர்பில் மிகஅவதானமாக இருக்குமாறும் எச்சரித்துள்ளது. (து)

## பாடசாலைகள்...

பாடசாலைகளை மூடுவது தொடர்பில் அந்தந்த மாவட்டச் செயலரின் அறிவுறுத்தலை நடைமுறைப்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் தொடரும் கன மழை காரணமாக பல பிரதேசங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 7 மணி தொடக்கம் அடுத்த 24 மணிநேரத்துக்கு கனமழை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. இந்த நிலையில், மேற்கண்ட அறிவிப்பை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் விடுத்துள்ளார். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு அவர் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார். (து)

# இந்த ஆண்டில் மட்டும் 2.3 ட்ரில்லியன் கடன்

## மரிக்கார் வெளிப்படுத்தல்



**கொழும்பு, நவ. 10**

**தற்போதைய அரசு இந்த ஆண்டில் மாத்திரம் 2.3 ட்ரில்லியன் கடனைப் பெற்றுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.**

குறித்த பணத்தொகையை அரசு எதற்குப் பயன்படுத்தியது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். கொழும்பு எதுல்கோட்டையில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசும் 2021ஆம் ஆண்டில் மட்டும் 2.3 ட்ரில்லியன் ரூபா கடன்களைப் பெற்றுள்ளது. இருப்பினும் தாமரைக் கோபுரம், துறைமுகங்கள், மைதானங்கள் மற்றும் விமான நிலையங்களை நிர்மாணிப்பதற்கும் குடும்பத்தினர் பயணம் செய்வதற்கும் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் அதிக தொகை கடனாகப் பெறப்பட்டது. குறித்த கடன் தொகையானது கடந்த அரசினால் பெறப்பட்ட கடன்களை தீர்ப்பதற்கே பெறப்பட்டது என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்திருந்தார். நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திகள் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் பெருங் குழப்பம் நிலவுகின்றது - என்றார். (ம)

## தங்கத்தின் விலை கிடுகிடு உயர்வு!

கொழும்பு, நவ. 10

உலக சந்தையில் தங்கத்தின் விலை பெருமளவு அதிகரித்துள்ளது என்று சர்வதேச சந்தை நிலவரங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கமைய வார இறுதியில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை ஆயிரத்து 816.80 அமெரிக்க டொலர் வரை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித் திட்டம்

சாவகச்சேரி, நவ.10

இந்தவருட தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய பொது நூலகங்களில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அறிவித்துள்ளனர்.

"தொலைதூர வாசிப்பு" என்ற தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இந்த வருடத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டங்களை ஜனவரி 31ஆம் திகதி வரை செயற்படுத்துமாறும், ஒவ்வொரு செயற்றிட்டமும் சுகாதார அமைச்சால் அறிவிக்கப்படும் விதிமுறைகளுக்கேற்ப நடத்தப்படல் வேண்டும் என்றும் சபையின் தலைவர் சொனால குணவர்த்தன அறிவித்துள்ளார். (ஓ-ரி1-9)

## வாரத்துக்கு இருமுறை கைதிகளைப் பார்க்கலாம்!

கொழும்பு, நவ. 10

சிறைக் கைதிகளை வாரத்துக்கு இரண்டுமுறை பார்வையிட விருந்தினர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என சிறைச்சாலைகள் திணைக்களம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

கொரோனா காரணமாக வாரத்துக்கு ஒருமுறை மட்டுமே கைதிகளை பார்வையிட விருந்தினர்கள் மற்றும் உறவினர்கள் முன்னர் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் குறித்த எண்ணிக்கை தற்போது இரண்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஐ.ம.சக்தியை மாற்றுச் சக்தியாக மக்கள் இன்னமும் கருதவில்லை!

### பொன்சேகா வெளிப்படைப் பேச்சு



கொழும்பு, நவ. 10

ஐக்கிய மக்கள் சக்தியை மாற்று அரசியல் சக்தியாக மக்கள் இன்னும் கருதவில்லை என்று அந்தக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மீரிகம பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசின் மீது அதிருப்தி கொண்டுள்ள மக்கள் மாற்று அரசியல் சக்தியாக, ஐக்கிய மக்கள் சக்தியை இன்னும் கருதத் தொடங்கவில்லை. பெரமுனவுக்கு ஆதரவாக வாக்களித்த 50 வீதமான மக்கள் அரசின் மீது கடும் அதிருப்தியடைந்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட கட்சியின் பல உறுப்பினர்கள் மீது எவ்வித ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்களும் கிடையாது. ஊழல், மோசடிகளைத் தடுப்பதாகக் கூறி ஆட்சிப்பீடம் ஏறிய நல்லாட்சி அரசைச் சேர்ந்தவர்களில் சிலரே ஊழல், மோசடிகளில் ஈடுபட்டனர்- என்றார். (ம)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.10

"இந்து சமய ஆன்மீக வாழ்வியல்" என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நூலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற நூலக சேவையாளர் செல்வரட்ணம் பத்மநாதன் எழுதியுள்ளார்.

பல்கலைக்கழகப் பதில் நூலகர் கலாநிதி கல்பனா சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு, நூலாசிரியருக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தார். (ம-ரி1)

# 20ஆல் ஜனநாயகம் இல்லாதொழிப்பு!

## முன்னாள் சபாநாயகர் கரு.சீற்றம்

கொழும்பு, நவ. 10

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தால் ஜனநாயகம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் தபாலகமாக மாற்றப்பட்டுள்ளது என்று சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கருஜயசூரிய நேற்றுமுன்தினம் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

'அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தால் எதிர்பார்த்த எதுவுமே நடக்கவில்லை. மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இருந்தும்கூட 20 ஆம் திருத்தத்தை வைத்துக் கொண்டு பொருள்களின் விலையைக்கூட கட்டுப்படுத்தமுடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது. அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டுவராமல் இருந்திருக்கலாம் என்பதே எனது கருத்து. அதன்மூலம் ஜனநாயகம் இன்று இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

20ஆல் நாடாளுமன்றம் தபாலகம்போல் உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டமும் முழுமையானது என நான் கூறமாட்டேன். எனினும், அதன் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய பயங்கரமான அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அரசியலமைப்பு பேரவை அமைக்கப்பட்டு, உயர் பதவிகளுக்கான நியமனங்கள் உரிய வகையில் இடம்பெற்றன- என்றார். (ம-44)

**பெண் வேலையாள்கள் தேவை**

**மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதிசெய்வதற்கு**
பெண் வேலையாள்கள் தேவை.
வயது எல்லை: 18 தொடக்கம் 30 வரை வேலை நேரம்: காலை 7.30 தொடக்கம்மாலை 5.30 வரை மாத வேதனமாக 17000/= தொடக்கம்25000/= வரை வழங்கப்படும்.

(cs.41021) (2.6) **074 049 0003**

**பெண் உதவியாளர் தேவை**

முல்லைத்தீவிலுள்ள வயோதிபப் பெற்றோரை தங்கியிருந்து பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை.
**சம்பளம் 35, 000 /- வழங்கப்படும்.**

(CR 35847) (3/6) **077 710 0874**



இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.